# ஹஸ்ரத் தாஜுதீன் பாபா
# குருசரித்திரம்

## மதம் கடந்த மகான்
## (அற்புதங்களும், உபதேசங்களும்)



NOT FOR SALE

ஆசிரியர்

**திருமதி. ரமா சுப்ரமணியன்**

Mrs. **RAMA SUBRAMANIAN**

MAHARAJA OF NAGPUR

Published by :
**Shrimant Raje Raghuji Maharaj Bhonsle**
(Pratham) Bahuuddeshiy Smruthi Pratisthan
Senior Bhonsla Palace, Mahal, Nagpur - 440 032, Maharashtra.
Ph : 0712 - 2722678 Cell : 09823052724

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

Title : **Hazrat Tajuddin Baba Guru Charithram**

Author : **Smt. Rama Subramanian**

C4, Baba Nagar, Jeswanth Nagar (Extn.)
Mugappair West, Chennai - 600 037.
Cell : 08144928666
E-Mail:abacus06@gmail.com

Publisher : **Shrimant Raje Raghuji Maharaj Bhonsle**
(Pratham) Bahuuddeshiy Smruthi Pratisthan
Nagpur - 440 032.
Ph : 0712 - 2722678, Cell : 09823052724

Edition : 2018 - 1500 Copies

Date : **27-01-2019**
On the Auspicious Occasion of
Hazrat Tajuddin Baba's
158th Birthday Celebration

Book Released at Shakardhara, NAGPUR.

NOT FOR SALE

MAHARAJA OF NAGPUR

© Copyright : Shrimant Raje Raghuji Maharaj Bhonsle,
Bahuuddeshiy Smruthi Pratisthan

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# சமர்ப்பணம்

என் குல தெய்வத்திற்கும், முன்னோர்களுக்கும்
நமஸ்காரங்கள்!

இப்பிரபஞ்சத்தின் ஏழு உலகங்களிலும் தமது ஆளுமையைப் பெற்றவரும், மகா யோகீஸ்வரரும், இன்றளவும் உலகம் முழுவதும் தம்மீது நம்பிக்கை கொண்டவர்களை காத்து, அநேக அற்புதங்களைப் புரிந்து கொண்டிருப்பவருமான ஹஸ்ரத் தாஜுதீன் பாபா அவர்களின் சரித்திரத்தையும், அற்புதங்களையும் எழுதுமாறு என்னைப் பணித்து, ஒவ்வொரு வாக்கியத்தையும், கருணையோடு என் விரல் பிடித்து எழுத வைத்த, என் சத்குரு ஷீரடி ஸ்ரீ சாய்பாபாஜி அவர்களுக்கும், இப்புண்ணிய தேசத்தில் அவதரித்த மகான்கள் அனைவரின் பாதங்களிலும் படர்ந்த புழுதிப் படலத்திற்கும் என் சிரம் தாழ்த்தி வணங்கி இந்நூலை சமர்ப்பிக்கின்றேன்.

NOT FOR SALE



ஜெய் பாபா தாஜ்!

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# முன்னுரை

நம் பாரத தேசத்தை புண்ணிய பூமி என்று அனைவரும் போற்றுவதற்கான காரணம், இங்கு மாபெரும் மகான்களும் ஞானியரும் அவதரித்துள்ளனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நம் தேசத்தில் அவதரித்த, மதம் கடந்த மாபெரும் மகான், ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபா என்ற மகா யோகீஸ்வரர் ஆவார். அவர் பஞ்சபூதங்களின் மேல் ஆதிக்கம் உடைய சர்வசக்தி வாய்ந்த மகானாக போற்றப்படுகிறார்.

சூரியன் தனது ஒளியை பாகுபாடின்றி, அனைவருக்கும் தருவதைப் போல, தாஜுத்தீன் பாபாவை தரிசிக்க வந்த அனைத்து மதத்தினரையும், அன்புடன் ஆசீர்வதித்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி உள்ளார்.

இம்மகானின் சேவையில் தம்மை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டவர்களில், நாக்பூரின் மன்னரான ராஜா ராகோஜிராவ் IV என்பவர் ஆவார். அவர் மகாராஷ்டிரா தேசத்தை ஒருங்கிணைத்த, வீரம் மிகுந்த சத்ரபதி சிவாஜியின் பரம்பரையைச் சேர்ந்தவர். ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபாஜி, மன்னரை தமது மூத்த சகோதரர் என்று அன்புடன் அழைத்தார்.

ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபா, வாக்கி என்ற இடத்தின் ஜமீன்தாரரான திரு.காசிநாத் பாட்டில் அவர்களுக்கு, ஒரு மகாசிவராத்திரி தினத்தில், சர்வேஸ்வரராகக் காட்சியளித்தார். ஹஜ் புனித யாத்திரையாக மெக்காவிற்கு சென்ற ஹாஜி ஒருவருக்கு, மெக்காவின் புனித மலைசிகரத்தில், பாபாஜி தமது திருஉருவத்தையே காண்பித்துள்ளார். 1897ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் நாள், கிறிஸ்துமஸ் சுபதினத்தில், நாக்பூர் தேவாலயத்தில் கூடியிருந்த அனைவருக்கும், பாபாஜி, இயேசுநாதராகக் காட்சியளித்துள்ளார். இவை அனைத்துமே தக்க சான்றுகளுடன் நிரூபிக்கப்பட்டுள்ளன.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இன்றளவும் தாஜுத்தீன் பாபாவின் அற்புதங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இம்மகான் தமது பெயரை குறிப்பிடும் பொழுது "ஷாஹின்ஷா ஹஃப்தே ஹக்லீம் (Shahensha Hafta Aklem) என்று கூறுவார். இதன் பொருள் ஏழு உலகங்களாக வகுக்கப்பட்ட இப்பிரபஞ்சத்தின் ஆளுமையை, இறைவனிடமிருந்து பெற்றவர் என்பதாகும். இம்மகானின் வாழ்க்கை சரித்திரத்தை எழுதுவதற்காக, அடியேன் நாக்பூர் சென்ற போது, நிகழ்ந்த அற்புதங்களை, இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

நாக்பூரில் எவரையும் அறியாமல், பாபாவைப் பற்றிய தகவல் சேகரிப்பதற்காக தவித்துக் கொண்டிருந்த பொழுது, தாஜுத்தீன் பாபாவின் அளவற்ற கருணையால், நாக்பூர் மன்னர் பரம்பரையினர் அடியேனை, சகல மரியாதைகளுடன் அழைத்துச் சென்று அவர்களின் இல்லத்தில் தங்க வைத்தனர். தாஜுத்தீன் பாபாவைப் பற்றி இந்நூல் வெளியிடுவதற்கு சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தனர்.

மன்னரின் நான்காவது தலைமுறையில் பிறந்த ராஜா ராகோஜிராவ் மற்றும் அவருடைய சகோதரர் ராஜா முதோஜி ராவ் இருவரும் தாஜுத்தீன் பாபாவிற்கும், மன்னர் பரம்பரையினருக்கும் இருந்த தெய்வீக உறவைப் பற்றிய அனைத்து விவரங்களையும் தெரிவித்தனர். மன்னர் வம்சத்தின் சகோதரியான ராணி ஸ்ரீ மோகினி தேவி அவர்களும், மன்னரின் புதல்வி ஸ்ரீ மிருணாளினிதேவி அவர்களும் இந்நூலின் பொருட்டு, எந்த சமயத்தில் தொடர்பு கொண்டாலும், உற்சாகமாக பாபாவைப் பற்றிய பல தகவல்களை சேகரித்து அளித்தார்.

அரச குலத்தவரின் நெருங்கிய நண்பர்கள் அனைவரும், பாபா வசித்த பல்வேறு பகுதிகளைச் சுற்றிக் காண்பித்தனர். நாக்பூரை அடையும் வரை எவரையுமே அறியாத அடியேனுக்கு, அனைத்து சாதுக்களுக்கும் சேவை புரியும், அரச குடும்பத்தையோ சொந்தமாக்கிய, தாஜுத்தீன் பாபாவின் கருணையையும், அற்புதங்களையும் விவரிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை!

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பாபாஜி, ஒருமுறை தமது சரித்திரத்தை எழுத நினைத்த ஒருவரிடம், எனது சரித்திரத்தை எழுதுவதற்கான காகிதத்தையும், எழுதுகோலையும் உன்னால் எங்கிருந்து கொண்டு வர இயலும்? என்றார். மகான்களின் சரித்திரத்தை எழுதுவதற்கும், படிப்பதற்கும், கேட்பதற்கும் அவர்கள் சமாதியை தரிசிப்பதற்கும் பூர்வஜென்ம புண்ணியம் செய்தவர்களால் மட்டுமே சாத்தியமாகும்.

இந்நூலை எழுதுவதற்காக என்னை ஊக்குவித்த, எனது குரு, திரு. பிரேமா சாய்ராம் அவர்களுக்கும், இந்த உன்னதமான பணிகளுக்கு உறுதுணையாக இருந்த நாக்பூரின் அரச குடும்பத்தினருக்கும், வாக்கியைச் சேர்ந்த திரு. பிரபாகர் ராவ் பாட்டில் அவர்களுக்கும், நாக்பூரின் பெரிய தாஜ் தர்காவில் நிர்வாகியான திருவாளர், குபடே சாஹேப் அவர்களுக்கும், எனது குடும்பத்தினருக்கும் மற்றும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த பிரபல எழுத்தாளர் திருமதி. இந்துமதி அவர்களுக்கும், ஸ்ரீ பாதவல்லப சரித்தை தமிழாக்கம் செய்த சகோதரர் திரு. சந்தானம், சாயி என் வாழ்க்கை உன்னோடுதான் ஆசிரியர் திரு. சிவனேசன், ஸ்ரீ செல்வபாபா ஆலய குடும்பத்தினருக்கும், இந்நூலை பக்தியோடு வடிவமைத்துக் கொடுத்த சகோதரர் வேல்முருகன், சேவை நோக்கோடு அச்சிட்டு அளித்த திரு.சங்கர் மற்றும் பாபாவின் பக்தர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்!

என்னை ஒரு கருவியாக இயக்கி, இப்பணியை ஆற்ற வைத்த இறைத்தூதர் எங்கும் நிறைந்த பரம்பொருளான ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபாவின் பாதங்களில் மண்டியிட்டு என் சிரம் தாழ்த்தி வணங்கி, இந்நூலை தமிழுலகிற்கு சமர்ப்பிக்கின்றேன்.

நன்றி!

ஜெய் பாபா தாஜ்!

சென்னை - 37
Cell : 08144928666

திருமதி. **ரமா சுப்ரமணியன்**
ஆசிரியர்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# அணிந்துரை

## (PREFACE)

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# பொருளடக்கம்

**அத்தியாயம் - 1** 12-39

தாஜுத்தீன் பாபாவின் குழந்தைப் பருவம், ஆறு வயதில் அவருக்கு ஏற்பட்ட இறை அனுபவம், பாபாஜி அவர்களின் கல்வி ஞானம், பதிமூன்று வயதில் பஸ்தர் காடுகளில் நிகழ்த்திய அற்புதம், இராணுவப் பணியில் பாபாவின் சேவை, இரண்டாவது முறை பாபா பெற்ற முழுமையான இறை அனுபவம், பாபா முற்றும் துறந்து, தன்னிலை அறிந்த ஞானி ஆனார், பொற்கொல்லரிடம் பாபா நிகழ்த்திய அற்புதம், பாபா யாசகம் பெற்ற நிகழ்வு, விழுவதாக இருந்தால் விழட்டும், தாஜுத்தீன் இருக்கும் போது கவலை ஏன்?, மூன்று குழந்தைகளுக்கு வரம் அளிக்கிறேன், வெற்றி செய்தியுடன் வருவாயாக, மனநல மருத்துவமனைக்கு பாபாஜி சென்ற அற்புத நிகழ்வு.

**அத்தியாயம் - 2** 40-69

மனநல மருத்துவமனையில் பாபாஜி நிகழ்த்திய அற்புதங்கள்

மருத்துவர் பாபாவை மகானாக உணர்ந்த நிகழ்வு, தப்பி ஓடிய மனநோயாளியை வரவழைத்தது, மருத்துவர் அப்துல் மஜீத்தின் உயிரை காப்பாற்றிய அற்புதம், அவருக்குப் பதவி உயர்வு அளித்த அற்புதம், அந்த நாற்காலியில் அமர்வாயாக!, நீண்ட காலம் பிரிந்த நண்பரை சந்திக்க செய்தது, நீ என்னிடம் ஒன்றுமே கூறத் தேவையில்லை!, இறைவனின் ஆணையை ஏற்பாயாக!, வழக்கிலிருந்து நீ விடுவிக்கப்படுவாய், தாஜுத்தீன் உன்னைக் காப்பாற்றுவார், சாமான்ய மனிதர்களால் இயலாத காரியம், கற்களை சுவைத்து உண்ட அற்புதம், பஞ்சபூதங்களிடம் பாபாவின் ஆளுமை, தீய ஆவியே மரியாதையாக விலகிச்செல்!, இன்னும் ஏன் உறக்கம்? எழுந்து ஓடு!, உன் மனைவி இறந்துவிட்டாள் என்பதை நீ அறிவாயா?, சந்தேகம் வேண்டாம், மருத்துவர் காசிநாத்திடம் தாஜுத்தீன் பாபா நிகழ்த்திய அற்புதங்கள், துகாராமிடம் பாபாஜி நிகழ்த்திய அற்புதம், உன் தந்தை நலமுடன் இருக்கிறார்!, பிரம்மச்சாரி பாபாவின் ஆத்மாவில் தாஜுத்தீன் பாபா, ஹஜ் யாத்திரையில் மெக்காவில் இறைத்தூதராக பாபா காட்சியளித்த அற்புதம், வளைந்த கையை சீராக்கிய அற்புதம், பாபாவின் கடமை உணர்வு, மனநல மருத்துவமனை பிரிட்டிஷ் அரசுக்கு பாபாவை குறித்து அளித்த தகவல்.

**அத்தியாயம் - 3** 70-105

ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபா சக்கர்தாராவில் நிகழ்த்திய அற்புதங்கள், ஸ்ரீ ஹீராசிங் மகராஜ் மன்னரிடம் பாபாவிற்கு சேவை செய்ய பணித்தது, தாஜுத்தீன் பாபாவை

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மன்னர் மருத்துவமனையிலிருந்து அழைத்து வந்த அற்புத நிகழ்வு, மன்னரின் 25 தலைமுறைக்கும் பாபாவின் ஆசீர்வாதம், சக்கர்தாராவில் பாபாவிற்கு ஆராதனை, அனைத்து உயிர்களிடமும் பாபா கொண்டிருந்த அன்பு, என்னை விலைக்கு வாங்கும் தகுதி எவருக்கும் இல்லை, பாபாவை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு மன்னரின் சேவை, முதல் உலகப்போரில் பாபா நிகழ்த்திய அற்புதம், பாவம் செய்தவர்கள் என்னிடத்தில் வரட்டும், பெண்கள் அனைவரும் எனது தாயாவார்கள், பக்தரின் மகளை காப்பாற்றியது, புகைப்படத்தில் நிகழ்ந்த அற்புதம், பாபாவின் பின்னர் தொடர்ந்து வந்த பக்தர்கள், பாபாவின் அங்கியை காற்று சலவை செய்த அற்புதம், இயற்கையின் மீது பாபாவின் ஈடுபாடு.

**அத்தியாயம் - 4** 106-130

<u>வாக்கி தர்பாரில் தாஜுதீன் பாபா நிகழ்த்திய அற்புதங்கள் :</u>

பாபாஜி வாக்கி சென்றதற்கான காரணம், நானாஜி பாபாவை தரிசித்த நிகழ்வு, நானாஜி பாபாவை வரவேற்ற நிகழ்வு, நானாஜிக்கு சர்வேஸ்வரனாக காட்சியளித்த அற்புதம், நானாஜியின் மகன் மகாதேவனின் உடல்நிலையை சீராக்கியது, நானாஜியின் கடன் தீர்க்க தங்க பாளைகளை உருவாக்கிய அற்புதம், சீதாராமிற்கு பண்டரிபுரத்தில் பாபாஜி விட்டலாக காட்சியளித்தது, பௌர்ணமி நிலவை இரு துண்டுகளாக்கிய அற்புதம், என்னுடைய பங்கு எங்கே?, இறந்த நாயை (ஷேரு) உயிருடன் எழுப்பியது, கிரிஜாபாய்க்கு உயிர் அளித்த அற்புதம், உன் குழந்தை மணலில் புதைந்துள்ளது தோண்டி பார்!,

<u>வாக்கியில் தரிசிக்க வேண்டிய புண்ணிய தலங்கள் :</u>

மருத்துவமனை, பாபாவின் நீதிமன்றம், கல்விக் கூடம் (மதரஸா), சுவைமிக்க வேம்பின் இலை (மீட்டா நீம்), காபுல் கந்தஹாரில் பாபா நிகழ்த்த அற்புதங்கள்.

**அத்தியாயம் - 5** 131-200

சக்கர்தாராவிற்கு மீண்டும் வருகை தந்த தாஜுதீன் பாபாவின் அற்புதங்கள் :

புதுதில்லியிலிருந்து நாக்பூருக்கு ஒரு மணி நேரத்தில் வரச் செய்த அற்புதம், கோடிக்கணக்கில் பணம் வரவழைத்த அற்புதம், அறிவியல் அறிவை விட ஆன்மீக அறிவு உயர்ந்தது, சிறுவனை காப்பாற்றியது, சென்னையில் வசிக்கும் பக்தருக்கு காட்சியளித்தது, தேவதையை அழைத்த அற்புதம், ஆங்கிலேய அதிகாரியிடம் நிகழ்த்தி அற்புதம், இறந்த மூன்று நாட்கள் கழித்து உயிரோடு எழுப்பிய அற்புதம், பூச்சி அரித்த வீட்டு பத்திரத்தை அடையாளம் காட்டியது, அளித்த வரத்தை திரும்பப் பெற்றது, தர்க்க விவாதத்தில் தோல்வியுற்ற தலைவர், இப்பிறவியில் உனக்கு

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அதிர்ஷ்டம் இல்லை, வைரம் அளித்து திருமணத்தை நடத்திய அற்புதம், காற்றில் வண்டியை செலுத்திய அற்புதம், என் பெயரால் எழுதப்பட்டவை சாயம் போகாது, தேச விடுதலைக்கு உறுதுணையாக இருந்த பாபாஜி, பாபாவின் பிரசாதம் பெற்றதால் சங்கீத வித்வானாக உயர்ந்த நிலை, கிரிக்கெட் வீரர் ஜி.கே.நாயுடுவிற்கு பாபா வழங்கிய விருது, தாராபாய் அளித்த உணவை சுவைத்த நிகழ்வு, ஊனமுற்ற குழந்தையை ஓடச் செய்த அற்புதம், ஆத்மாவில் நான் இருக்கும்போது வண்டியின் பின்னால் ஏன் வருகிறாய்?, பாபாவின் தொழுகை ஆகாயம் முழுவதும் ஒலித்த அற்புதம், இவரே நம்மைக் காக்க வந்த அவுலியா!, திருடர்கள் மாட்டிக் கொண்டால் என்னிடத்தில் வருகிறார்கள்! உனது நற்குணங்களே உம்மைக் காப்பாற்றும் மந்திரக் கயிறு, அஜ்மீர் அவுலியாவுடன் பாபாவின் தெய்வீக உறவு, அந்நியப் பொருள் மீது மோகம் வேண்டாம், மண்ணை மந்திரித்து நோயை விரட்டிய அற்புதம், இறைத் தூதுவரின் முன்னர் சித்து வேலை எடுபடாது, ஆதரிக்க வேண்டிய இடத்தில் அடிப்பது பாவம், பாபாவின் காலணிகள் தீய ஆவியை விரட்டிய அற்புதம், நான் அளிக்க நினைத்ததை எவராலும் தடுக்க இயலாது, நான் அளிக்க மறுத்ததை எவராலும் தர இயலாது, சமாதி நிலையை முன்னரே அறிவித்த பாபா, உடல் வேண்டுமா? அல்லது ஆத்மா வேண்டுமா?, உடல் தளர்ந்த போதும் ஊர்வலத்தில் பங்கேற்பு, தாஜுத்தீன் பாபாவின் மகாசமாதி நிகழ்வு, பாபாவின் சரீரம் நுழைவு வாயிலில் வெளியேறவில்லை, மன்னர் லால் மஹாலில் ஆறு மாடிக் கட்டிடத்தை இடித்த நிகழ்வு.

<u>மகா சமாதிக்குப் பின் பாபா நிகழ்த்திய அற்புதங்கள் :</u>

மகாசமாதிக்குப்பின் பாண்டுரங்களின் கண்களில் கண்ணீர், பாபா அளித்த வாக்கை காப்பாற்றுதல், ராஜா ஜெய்சிங் அவர்களை கைப்பற்றினார், ராணி யசோதர தேவியின் கருப்பையில் நிகழ்த்திய அற்புதம், ஹீராலாலுக்கு அளித்த வாக்கை நிறைவேற்றியது.

**அத்தியாயம் - 6** 201-217

மாதா மரியம் அம்மாஜி, மகாராஜாவின் பரம்பரையினர் சேவை செய்த மகான்களின் பட்டியல், தாஜுத்தீன் பாபாவை சந்தித்த மாபெரும் மகான்கள், படாதாஜ்பாக்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஜெய் பாபா தாஜ்!

## அத்தியாயம் - 1

எங்கும் நிறைந்த பரம்பொருளான இறைவனை, அடியேன், சிரம் தாழ்த்தி வணங்கி, இப்புனிதப் பணியை துவங்குகின்றேன். இவ்வுலகில் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு பிரதேசங்களில் அவதரித்த மகான்கள், மத, இன, குல வேறுபாடுகளைக் கடந்தவர்கள். அவர்கள், எந்த மதத்தில் அவதரித்தாலும், தாம் பிறந்த குலத்தை முன்னிறுத்தி, தமது அடையாளத்தை வெளிப்படுத்த மாட்டார்கள். ஒருவரது உடலுக்கு மட்டுமே, நாம் குலப்பெயரை கூற இயலும். ஆனால் ஆத்மாவிற்கு எவரும் குலப்பெயரை அடையாளம் காட்ட இயலாது.

இந்த உடல் என்றாவது ஒருநாள் அழியக்கூடியதாகும். ஆனால் ஆத்மா அழிவற்றது. அத்தகைய அழிவற்ற ஆத்ம தேடலில் ஈடுபட்டு, அதில் வெற்றியும் பெற்றவர்களை, மகான்கள் என்று அனைவரும் போற்றுகின்னர். நம் பாரத தேசத்தில் எண்ணற்ற மகான்களும், ஞானிகளும் அவதரித்துள்ளனர். அவர்கள் பல்வேறு சோதனைகளை கடந்து, இறைவனைத் தேடும் முயற்சியில் வெற்றியும் பெற்றுள்ளனர். அவர்கள் அனைவரின் கோட்பாடுகளும், தத்துவங்களும், மனித சமுதாயத்திற்கு அன்பை மட்டுமே போதிக்கின்றன. அனைத்து மதங்களும் இறைவனை, அன்பின் திருவுருவமாகவே பார்க்கின்றன.

நமது பாரத தேசத்தின் கருப்பையில் உதித்த, சனாதன தர்மத்தை பல்வேறு மகான்களும், ஞானிகளும் இச்சமூகத்தில் போதித்து வழிநடத்தினர். அவ்வாறே, பல நூற்றாண்டுகளாக இவ்வுலகம் முழுவதும் போற்றி வணங்கப்படுகின்ற சூஃபியிஸம் (SUFISM) என்ற உயர்ந்த இறைத்தத்துவத்தை, அம்மரபில் அவதரித்த, மாபெரும் மகான்கள், தாமும் கடைப்பிடித்து அனைவருக்கும் போதித்து வந்துள்ளனர்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உலகத்தார் அனைவராலும் போற்றப்படும் சூஃபியிஸத்தின் தந்தை என்றழைக்கப்படும் காலிஃபா பின் அபூ அலி (Khalifa-Bin- Abu Ali) என்ற மாபெரும் ஞானி ஆவார். சூஃபியிஸம் என்ற இத்தத்துவத்தின் முழுமையான உட்கருத்தை விவரிக்க வார்த்தைகளே இல்லை என்பதே சத்தியமாகும்.

ஒரு பாரசீக ஞானி சூஃபியிஸத்தைப் பற்றி, தமது கவிதையின் மூலம் இவ்வாறு அற்புதமாக வெளிப்படுத்தி உள்ளார். எந்த ஒரு தத்துவம், வெவ்வேறு சூழ்நிலைகளின் விளைவாக, நிகழ்ந்த நிகழ்வுகளால் பாதிக்கப்படும் நம் இதயத்தை சீராக்கி, இவை அனைத்திலிருந்தும் நம்மை விடுவித்து, சிதறும் நம் சிந்தனைகள் முழுவதையும் ஒருமுகமாக்கி, ஆத்மாவில் இறைவனைத் தேடுவது ஒன்றையே லட்சியமாகக் கொண்டுள்ளதோ, அதுவே சூஃபியிஸம் என்பதாகும்.

இறைவனை நம் ஆத்மாவில் தேடுவதைக் காட்டிலும், உயர்ந்த பணி இவ்வுலகில் வேறெதுவும் இருக்க இயலாது! என்பதே சூஃபியிஸத்தின் அடிப்படைத் தத்துவமாகும். இத்தகைய உயர்ந்த இறைத்தத்துவத்தை, பிரிவினைகளைக் கடந்து, அனைவருக்கும் சமமாக போதித்த, மாபெரும் மகான் ஹஸரத் தாஜுத்தீன் பாபாஜி ஆவார்.

நம் பாரத தேசத்தில் குறிப்பாக, மகாராஷ்டிராவில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் துவங்கி பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை ஏராளமான சர்வசக்தி வாய்ந்த மகான்கள் அவதரித்துள்ளனர். இத்தகைய மகான்கள் இன்றளவும் சூட்சும ரூபத்தில் நம் அனைவரையும் காத்து இரட்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகாயத்தில் இருந்து விழும் மழைநீர் பாகுபாடின்றி எல்லா இடங்களிலும் பொழிந்து புனிதமான நதிகளோடு கலந்து அவற்றுக்கு பெருமை சேர்க்கின்றது. அதைப்போன்றே இப்புண்ணிய பூமியில் இறைவனுடைய அருளாலும், அளவற்ற கருணையாலும் தலைசிறந்த மகான்கள் நம்மிடையே தோன்றியுள்ளனர்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவ்வாறு அவதரித்த மகான்களில், பத்தொன்பதாவது நூற்றாண்டைச் சேர்ந்த ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபாவும் ஆவார். பொதுவாக ஒவ்வொரு மகானுக்கும் அவர் மகாசமாதி அடைந்த புண்ணிய இடத்தில் சமஸ்தானம் ஒன்று அமைக்கப்பட்டு, அம்மகானுக்கு ஆராதனை, வழிபாடுகள் அங்கே நடத்தப்படும். மேலும் அம்மகானை குறித்த முழுமையான விவரங்களை, நாம் அவருடைய சமஸ்தானத்தின் மூலமாக பெற இயலும்.

அத்தகைய அறக்கட்டளைகளில் சேவை செய்பவர்கள் ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்களே இருப்பது வழக்கம். ஆனால், மதங்கள் கடந்த மாபெரும் மகானாக விளங்கும் தாஜுத்தீன் பாபா மனநல மருத்துவமனையிலும், சக்கர்தாரா அரண்மனையிலும், வாக்கியில் காசிநாத் நானாஜியின் இருப்பிடத்திலும், எண்ணற்ற அற்புதங்களைப் புரிந்துள்ளார்.

உலகில் வேறு எங்குமே காண இயலாத ஒரு அற்புதத்தை, நாம் நாக்பூரில் காணலாம். அது என்னவென்றால், தாஜுத்தீன் பாபாவிற்கு மட்டுமே இங்கு நான்கு இடங்களில், நான்கு சமஸ்தானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பாபாவின் சேவையில் இவை நான்கும் ஒருங்கிணைந்து செயலாற்றுகின்றன.

இதைக் காட்டிலும் மிகப்பெரிய அற்புதம் என்னவென்றால், இஸ்லாமியர் நடத்தும் பாபாவின் அறக்கட்டளையின் நிர்வாகக் குழுவில், இந்து மதத்தைச் சேர்ந்தவர்களும் சரிசமமாக இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதுதான். இவற்றின் மூலம் நம் தாஜுத்தீன் பாபாஜி, மதம் கடந்த மகான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள இயலும்.

மகான்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை அவர்களின் அருளின்றி எழுத இயலாது. அத்தகைய பேரருள் புரிந்து, இப்புனித வரலாற்றை எழுத வைத்த, மாபெரும் அவுலியா என்று உலக மக்கள் அனைவராலும் போற்றப்படும் ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபாஜி அவர்களின்முன் அடியேன் மண்டியிட்டு, என் சிரம் தாழ்த்தி நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மகான்களின் புனித சரித்திரங்களை பக்தியோடு படிப்பவர்களும், கேட்பவர்களும் மிகுந்த புண்ணியம்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

செய்தவர்களாவார்கள். வாருங்கள்! நாம் அனைவரும் இப்பொழுது, ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபா அவர்களின் புனித சரித்திரத்தையும் அவருடைய உபதேசங்களையும் அவர் புரிந்த எண்ணற்ற அற்புதங்களையும ஆனந்தமாக கேட்போம்!

முகலாய சாம்ராஜ்ஜியத்தின் கீழ் நம் தேசம் இருந்த வேளையில், அரபு நாட்டிலிருந்து ஹஸ்ரத் இமாம் ஹஸ்காரி என்பவரின் வம்சாவளியினர் இந்தியாவிற்கு வந்தனர். அவர்கள் கடல் மார்கமாக, வாணிபம் செய்யும் பொருட்டு, தென்னிந்திய கடற்கரையின் வணிக மையமான, சென்னை மாகாணத்திற்கு, முதன்முதலாக வருகை தந்தனர். அவருடைய பரம்பரையினர் நீண்ட காலமாக சென்னை மாகாணத்திலேயே வாழ்ந்து வந்தனர். ஹஸ்ரத் இமாம் அஸ்காரியின் வாரிசுகளான,

ஹாசன் மெஹதி ஜலாலுதீன்,

ஹாசன் மெஹதி ருக்னுனுதீன்,

அவர்கள் இருவரில் மூத்த சகோதரரான, ஹஸ்ரத் ஜலாலுதீனின் பரம்பரையில் வந்தவர் ஹஸ்ரத். சையத் பத்ருதீன் ஆவார். அவருடைய தவப்புதல்வரே, மதம் கடந்த மகானாக விளங்கும் ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபாஜி ஆவார். ஹஸ்ரத் சையத் பத்ருதீன் அவர்கள், சென்னை மாகாணத்தின் சார்பாக, இராணுவத்தில் சேர்ந்து நாக்பூர் மாவட்டத்தில் காம்தி என்ற பகுதியில் அமைதியை நிலைநாட்டும் பொறுப்பை வகித்தார்.

அவர் நீண்ட காலம், கம்தி பகுதியில் பணியாற்றியதால், அப்பகுதியை சேர்ந்த ஷேக் மீரான் சாகிப் என்பவருடைய புதல்வியான மரியம் பேகம் என்பவரை திருமணம் செய்து கொண்டார். அத்தூய உள்ளம் கொண்ட தம்பதிகள், இறைவழிபாட்டிலும் சமூக நலனிலும் மிகுந்த அக்கறை காட்டி வந்தனர்.

இத்தம்பதியினருக்கு வாரிசாக இப்புனித பகுதியில் அவதரித்தவர்தான், மகான் ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபா ஆவார். 1861 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ஆம் தேதி அன்று திங்கட்கிழமை என்ற புனித நாளில், மாபெரும் மகான் ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபா அவதரித்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பாபாஜி தமது அன்னையின் கருவில் இருக்கும்போதே, தாம் இறைவனின் தூதர் என்பதை அவருடைய அன்னைக்கு வெளிப்படுத்திவிட்டார். பாபாவின் தாயாரான மரியம் பீவி தமது கனவில், ஒரு அற்புதமான காட்சியைக் கிடைக்கப் பெற்றார். அக்காட்சியில் எங்கும் இருள் சூழ்ந்திருக்கும் வேளையில், திடீரென்று ஆகாயத்திலிருந்து பிரகாசமான ஒளியுடன் முழுநிலவு காட்சியளித்தது.

உடனே இருள்முழுவதும் நீங்கி, ஒளிமயமாக தோற்றமளித்தது. அவை அனைத்தும் ஒன்றாக இணைந்து, தமது மடியில் வந்து விழுந்ததாக, பாபாவின் அன்னை உணர்ந்தார். இத்தகைய இறை அனுபவத்தைப் பெறற மரியம் பீவி அவர்களின் மணிவயிற்றில் உதித்தவரே, ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபா ஆவார். ஹஸ்ரத் என்ற சொல் புனிதம் நிறைந்தது என்ற பொருளைக் குறிக்கும் சொல்லாகும்.

இவர் பிறந்தவுடன், மற்ற குழந்தைகளைப் போல் அழுகையோ, கூக்குரலோ இன்றி மௌனமாகவே இருந்தார். இதைப் பார்த்த செவிலியரும், பெற்றோரும் கவலை கொண்டனர். பொதுவாக இவ்வுலகத்தில், பிறக்கும் குழந்தை அழுகையுடன்தான் தனது வாழ்க்கைப் பயணத்தை துவங்கும். பிறக்கும் குழந்தை உயிருடன், ஆரோக்கியத்துடன் இருக்கிறதா என்பதை கண்டறிய, அதனுடைய அழுகைக் குரலே ஆதாரமாக இருக்கின்றது.

ஆனால் பாபாஜி அவர்கள் இம்மண்ணில் அவதரித்த நோக்கம், அனைவருடைய வேதனைகளையும் போக்குவதற்காகவே ஆகும். ஆகையால் அவர் பிறந்தவுடன் வெகுநேரமாக அழவில்லை. அவரை அழவைக்க, செவிலியர்கள் அவருடைய நெற்றி மற்றும் பல இடங்களில் செப்பு நாணயத்தால் சூடு வைத்து, காயத்தை ஏற்படுத்தினார்கள். இதன் பின்னர், தாம் நலமுடன் இருப்பதைக் குறிக்கும் வகையில் மிக குறைவாக ஒலி எழுப்பினார்.

அதன்பிறகு என்ன அற்புதம்! அக்குழந்தை நான்கு திசைகளிலும் தன் பார்வையைச் செலுத்தியது. இதைக் கண்ட

NOT FOR SALE

அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். அவ்வாறு அக்குழந்தையை அழ வைப்பதற்காக ஏற்படுத்திய காயங்களின் தழும்புகள், வாழ்நாளில் இறுதிக்காலம் வரை பாபாஜியின் நெற்றியிலும், மற்ற பகுதியிலும் காணப்பட்டது. மகான்கள் மற்றும் ஞானியரின், குழந்தைப் பருவம் மிக கடுமையான சோதனைகளை அனுபவிக்கக் கூடியதாகவே அமையும். இதற்கு நம் பாபாஜியும் விதிவிலக்கு அல்ல.

அவருக்கு ஒரு வயது நிறைவடையும் தருவாயில், அவருடைய தந்தையார் காலமானார். ஒன்பது வயது நிறைவடையும் தருவாயில் உற்ற துணையாக விளங்கிய அவருடைய தாயாரும் காலமாகி விட்டார். குழந்தை பருவத்திலேயே பெற்றோரையும் அவர்களின் அரவணைப்பையும் இழந்த பாபாஜி, அவருடைய அன்னையின் சகோதரரால் வளர்க்கப்பட்டார்.

தமது பாட்டனாரின் இல்லத்தில் வளர்ந்து வந்த பாபாஜி கல்வி கற்பதற்காக பள்ளியில் சேர்க்கப்பட்டார். அபார ஞானத்தை உடைய பாபாஜி தமது 13 வயதிற்குள் பாரசீக மொழி, உருது, ஆங்கிலம், மற்றும் பல மொழிகளிலும் மிக சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றார். முதன்முதலாக அவர் பள்ளியில் சேர்க்கப்பட்ட போது மிக பெரிய அற்புதம் ஒன்று நடந்தது.

அப்பொழுது காம்தி என்ற அப்பகுதியில் ஹஸ்ரத் அப்துல்லா என்ற பிரபலமான ஒரு அவுலியா வசித்து வந்தார். அவ்வூர் மக்களுக்கு அவர்மேல் மிகுந்த அன்பும் பக்தியும் இருந்தது. அவர் ஒரு நாள் தாஜுத்தீன் பாபாஜி அவர்கள் படித்துக் கொண்டிருந்த பள்ளிக்கு திடீர் என்று வருகை தந்தார். வகுப்பறையில் அமர்ந்து கொண்டிருந்த அனைத்து சிறுவர்களின், மத்தியில் தாஜுத்தீன் பாபாஜி அவர்களை கண்டு கொண்டார். ஆறு வயதே நிரம்பியிருந்த தாஜுத்தீன் பாபாவை, தனது அருகே அழைத்து, அவர் இறுகத் தழுவிக் கொண்டார்.

தன்னுடைய பையிலிருந்து உலந்த பேரீச்சம் பழத்தை எடுத்து ஒரு பகுதியை தான் உண்டு, அதன் மறுபகுதியை அன்புடன் பாபாஜி அவர்களுக்கு ஊட்டினார். திடீர் என்று வகுப்பறைக்குள் நுழைந்த அவுலியாவால் அங்கே மிகுந்த

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பரபரப்பு ஏற்பட்டது. பள்ளி நிர்வாகிகள் மற்றும் தலைமை ஆசிரியர் அனைவரும் வகுப்பறைக்கு விரைந்து வந்தனர். அச்சமயத்தில் அனைவர் முன்னிலையிலும் அப்துல்லா ஷா என்ற அவுலியா, தாஜுத்தீன் பாபாவைக் குறித்து, சில வார்த்தைகள் கூறினார்.

அவர் அங்கிருந்த ஆசிரியர்களை நோக்கி, "தாஜுத்தீன் என்ற பெயருடைய இந்த குழந்தைக்கு, உங்களால் என்ன கற்றுத்தர முடியும்?" இவர் அனைத்தையும் ஏற்கனவே கற்றுத் தெரிந்தவர். இவரை பயிற்றுவிக்கும் தகுதி, இங்கு ஒருவருக்குமே இல்லை என்று கூறினார். இதனைக் கேட்ட அனைவரும் ஆச்சரியத்தில், சிலையாக நின்று விட்டனர். அவர் நம் தாஜுத்தீன் பாபாவிற்கு மூன்று உபதேசங்களை வழங்கினார்.

நீ இன்று முதல்,

குறைவாக உண்பாயாக!

குறைவாக உறங்குவாயாக!

குறைவாக பேசுவாயாக!

இத்தகைய உபதேசங்களை வழங்கிய அந்த அவுலியா மேலும், நான் கூறிய இந்த உபதேசங்கள் யாவும், இன்று திருக்குரானை படித்துக் கொண்டிருக்கும் போது எனக்குள் தோன்றியவையாகும்! எங்கும் நிறைந்த அல்லாஹ்வின் தூதுவராய் நீ அவதரித்து உள்ளாய்! என்ற செய்தியும் எனக்கு அறிவிக்கப்பட்டது. இவ்வாறு கூறிவிட்டு, அந்த அவுலியா அவ்விடத்தை விட்டு நீங்கினார். இவை அனைத்தையும் கேட்டுக் கொண்டு இருந்த நம் தாஜுத்தீன் பாபா திகைத்து நின்றார். தம்முடைய பிறப்பின் இரகசியத்தை ஆறு வயதிலேயே தெரிந்து கொண்ட, பாபாவின் கண்களிலிருந்து அருவி போல் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

இத்தகைய பரவசநிலையை அடைந்ததும், தொடர்ந்து மூன்று நாட்கள் இரவும் பகலும் தாஜுத்தீன் பாபா அழுது கொண்டே இருந்தார். இந்நிகழ்வுக்குப் பிறகு அவருடைய இயல்பில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன. அவர் தன் சக தோழர்களோடு விளையாடுவதற்கு செல்லவில்லை. அவரிடம்

NOT FOR SALE

இருந்த குழந்தையின் குறும்புத்தனங்கள் அனைத்தும் மறைந்து விட்டன. எப்பொழுதும் அவர் தனிமையில் அமர்ந்து கொண்டு இருப்பதையே விரும்பினார்.

அவருடைய உறவினர்களோடு கூட அவர் உரையாடுவதை விரும்பவில்லை. பாரசீகத்தைச் சேர்ந்த சூஃபி (SUFI) பரம்பரையில் வந்த, மாபெரும் மகான்களின் சரித்திரத்தை கற்க துவங்கினார். அவர் அறிந்து கொண்ட அந்த மகான்களின் நற்குணங்களை தமது வாழ்க்கையில் வெளிப்படுத்தினார். பாபாஜி சூஃபி தத்துவக் கொள்கையின் மேல் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அதற்குக் காரணம் இத்தத்துவம், மதம் என்ற வலையில் சிக்குவதில்லை.

இப்பிரபலமான சூஃபி தத்துவக் கொள்கைகளுக்கு மிகப்பெரிய கவிஞர்கள் உயிரூட்டிய உள்ளனர். அவர்களில் மௌலான ரோம் (Moulana Rome) மற்றும் ஹஃபீஸ் ஷிராஸி (Hafis Shirazi) போன்ற மிகப்பெரிய சூஃபி தத்துவக் கவிஞர்கள் எழுதிய கவிதைகளில், அவருடைய இதயத்தைக் கவர்ந்த, சில வரிகளை தமது சீடர்களிடம் பகிர்ந்து கொண்டார். அவர் மனதைக் கவர்ந்த கவிதை வரிகளை நாம் இப்போது காண்போம்!

"போதை தரும் திராட்சை ரசத்தையும் அருந்தலாம்! புனித திருகுர்ஆனையும், வேதங்களையும் எரிக்கலாம்! புனித காஃபாவையும், ஆலயங்களையும் தகர்க்கலாம்! இவ்வாறு ஆற்றும் மாபெரும் தவறுகளைக் காட்டிலும், மிகப்பெரிய பாவம் என்னவென்றால்,"

வார்த்தைகளாலும், செயல்களாலும் பிறர் மனதைப் புண்படுத்துவதே ஆகும். அவர் கூறிய இக்கருத்தின் பொருள், பிறர் மனதை புண்படச் செய்வதைக் காட்டிலும் மிகக் கொடிய பாவம் இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை என்பதே ஆகும். மேலும் திருகுர்ஆனின் புனிதத்துவத்தை, அது எழுதப்பட்ட காகிதத்திலோ அல்லது அதை எழுதுவதற்கு உதவிய எழுதுகோல் மையிலோ, நாம் காண இயலாது. நமது கற்பனைக்கும் எட்டாத புனிதமான வேதமே திருகுர்ஆன் ஆகும்.

மாபெரும் ஞானியாகிய ஒருவர், மதவேறுபாடுகளுக்கு ஒருபோதும் மதிப்பு அளிக்கமாட்டார். ஹஸ்ரத் தாஜு'தீன்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பாபாஜி அவர்கள், தம்மை தரிசிக்க வரும் பக்தர்களிடம், "அனைத்து மதத்தினரையும் நம் சகோதரர்களாக, பார்க்க வேண்டும்!" என்று கட்டளையிட்டார். மேலும், அவர் அனைவராலும் அவுலியா என்று வணங்கப்பட்ட பொழுது, தம்மை காணவந்த பிற மதத்தவரிடமும் பாரபட்சமின்றி கருணையையும், அன்பையும் பொழிந்தார். ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபாவின் ஆன்மீகப் பயணம் எவராலும் வார்த்தைகளைக் கொண்டு எடுத்துரைக்க இயலாத அற்புத சரித்திரமாகும்.

**பஸ்தர் காடுகளில் பாபாவின் தவ வாழ்க்கை :**

தாஜுத்தீன் பாபா 13 வயது வரை கல்வி பயிலச் சென்றார். அவர் எல்லாம் வல்ல இறைவனுடைய தூதர் என்ற காரணத்தால், அச்சிறுவயதிலேயே, ஞானத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தார். அவருடைய ஞானத்தைக் கண்டு பல அறிஞர்களும் வியந்துள்ளனர்.

அதற்குப் பின்னர் தாஜுத்தீன் பாபா, இவ்வுலக வாழ்க்கைக்குரிய அறிவைக் காட்டிலும், பிரபஞ்சத்தின் மிக உயர்ந்த ஆத்ம ஞானத்தை அடைய விரும்பினார். அந்த உணர்வு அவரிடத்தில் தோன்றிய அடுத்த வினாடி, அவர் தமது இல்லத்தை விட்டு நீங்கினார். எவரிடமும் எதுவும் தெரிவிக்காமல், இறைவன் காட்டிய வழியில் நடந்து சென்று கொண்டிருந்தார்.

அவர் சட்டிஸ்கர் மாநிலத்தின் அடர்ந்த காட்டுக்குள் நுழைந்தார். அதுவே தமது தியானப் பயிற்சியை மேற்கொள்ள ஏற்ற இடம் என்பதை உணர்ந்த பாபாஜி இரவும், பகலும் கடுமையான தவத்தில் ஈடுபட்டார். அவருக்கு உணவும் நீரும் அளிப்பதற்குக் கூட அங்கு எவரும் இல்லை. ஆனால் அதைப் பற்றிய சிந்தனையே அவரிடத்தில் இல்லை.

அவர் வீட்டை துறந்தவுடன், அவருடைய உறவினர்கள் மிகவும் கவலை கொண்டனர். பாபாஜி தமது அன்னையை சிறுவயதில் இழந்ததால், அவருடைய தாத்தாவான திரு. ஷேக் மீரான் அவர்கள், தனது பேரனின் பிரிவை தாங்க இயலாமல், பல இடங்களிலும் அவரைத் தேடிச் சென்றார். ஆனால்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சட்டீஸ்கர் பிரதேசத்தின், அடர்ந்த காட்டில் இருந்த பாபாவை, ஒருவராலும் கண்டுபிடிக்க இயலவில்லை. அக்காட்டில், அச்சமயத்தில் மனிதகுலத்தையே அழிக்கும், பயங்கர நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தன.

அங்கு பூர்வீகமாக வசித்து வந்த பழங்குடி மக்கள், மாந்திரீக வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். செய்வினை, ஏவல், பில்லி, சூனியம் போன்ற பல தீய சக்திகளைப் பெற்றவர்கள். அதன் மூலம் அனைவரையும் அச்சுறுத்தி வருமானம் ஈட்டி வந்தனர். பிரிட்டிஷ் அரசாங்கமே அவர்களுக்கு பயந்து, காட்டிற்குள் சென்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பாபாஜி எதற்கும் அஞ்சாமல் அக்காட்டில் அவர்களுக்கு நடுவில் தவம் செய்யத் துவங்கினார்.

அவருடைய ஞானதிருஷ்டியில் அப்பகுதியில், இத்தகையப் பாவச்செயல்கள் நடைபெறுவதை உணர்ந்தார். அவர்களை திருத்தி நல்வழிப்படுத்த, இறைவனிடம் இரவு, பகல் பாராமல் பிரார்த்தனை செய்து வந்தார். பாபாவின் தவ வாழ்க்கை மிகவும் கடுமையானதாக இருந்தது. அவர் தனது தவத்திற்கு ஏற்ற இடமாக ஒரு பெரிய மரக்கிளையைத் தேர்ந்தெடுத்தார். காரணம், தரைப் பகுதி முழுவதும் பழங்குடி மக்களின் தீயசக்திகள் நிறைந்து காணப்பட்டன.

ஆகையால் பாபாஜி ஒரு பெரிய மரத்தின் மீது அமர்ந்து கொண்டார். பல மாதங்கள் உணவும் நீரும் இன்றி அம்மரத்தின் இலைகளையும், காய்களையும் உண்டு, தவ வாழ்க்கையை மேற்கொண்டார். இத்தகைய தவத்தால் இறைவனின் கருணை அப்பகுதியின் மீதும், அங்கு வசிக்கும் மக்களின் மீதும் விழுந்தது. அதன் காரணமாக பழங்குடியினர் தமது தீயசக்திகளை முழுமையான இழந்துவிட்டனர். தமது தீயசக்திகள் வேலை செய்யத் தவறிய காரணத்தையும் அவர்கள் அறிந்து கொண்டனர்.

தமது தீயசக்திகளை முறியடித்த, பாபாவை அழிப்பதற்காக, பல்வேறு தந்திர முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் அதன் விளைவு அவர்களுக்கே

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

ஆபத்தாக முடிந்தது. அவர்களில் பலருக்கு கண்பார்வை பறிபோனது. சிலருக்கு கை, கால் அசைக்க இயலாமல் போனது! மற்றும் கொடூரமான சிலர் இறந்து விட்டனர்.

இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த பழங்குடியினர் தனது தலைவனை அழைத்து, இனியும் பாபாவிற்கு தீங்கு நினைத்தால், நமது வம்சமே அழிந்து விடும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர். இத்தீய செயல்களை கைவிட்டு விடுவோம் என்று தீர்மானித்தனர். இதற்கும் பாபாஜி அவர்களின் தவ வலிமையே காரணமாகும். அவர்கள் அனைவரும் இத்தீர்மானத்தை மேற்கொண்டவுடன், ஒருநாள் பாபாஜி மரத்திலிருந்து கீழே குதித்தார்.

அந்த நாளை எதிர்பார்த்து பல மாதங்களாக ஆதிவாசிகள் காத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரும் அவரை வணங்கி, மன்னிப்பு வேண்டினர். கருணையோடு அவர்களையும் மன்னித்தார். பாபாஜி, இரண்டு வருடங்கள் அங்கு தங்கியிருந்து நற்சிந்தனைகளையும், ஒழுக்கத்தையும், இறை உணர்வையும் அவர்களின் உள்ளங்களில் விதைத்தார்.

இன்றளவும் சட்டீஸ்கர் மாநிலத்திலும், அதைச் சுற்றிலும், தாஜுதீன் பாபாவின் தீவிர பக்தர்கள் வசித்து வருகின்றனர். தமது தவ வாழ்வு அங்கு நிறைவடையும் நேரம் வந்தது. அவரிடமிருந்து விடைபெற்று தனது பதினெட்டு வயதில், நாக்பூரில் காம்தி நகரை நோக்கி புறப்படத் தயாரானார்.

பாபாவை பிரிய மனமின்றி அங்கு வசிக்கும் மக்கள் அனைவரும், கண்ணீருடன் அவரை வழியனுப்பி வைத்தனர். அவர்களை ஆசீர்வதித்து, நல்வழியில் வருமானத்தை ஈட்டி, எப்போதும் இறை சிந்தனையில் இருக்குமாறு அறிவுறுத்தினர். பின்னர் அவர்கள் அமைதியாக தமது இல்லத்திற்கு திரும்பிச் சென்றனர். பாபா தமது தவவாழ்வை பஸ்தர் காடுகளில் முடித்துக் கொண்டு தனது உறவினரின் இல்லத்திற்கு வருகை தந்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவரது 18-வது வயதில் அவர் வாழ்ந்த காம்தி நகரை மிகப்பெரிய ஆபத்து சூழ்ந்து கொண்டது. அப்பகுதியில் ஓடிய கன்ஹான் என்ற நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு காம்தி நகரம் முழுவதும் வெள்ளம் சூழ்ந்துக்கொண்டது. நகரம் முழுவதும் அமைந்த வீடுகள், வெள்ளத்தின் காரணமாக மிகுந்த சேதம் அடைந்தன. தங்களின் குடிசைகளும், உடைமைகளும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டதால், உணவிற்கும், உறைவிடத்திற்கும் வழியின்றி, மக்கள் மிகுந்த துயரம் அடைந்தனர். விதியின் இந்தக் கோரத்தாண்டவத்திற்கு பாபாஜியை வளர்த்தவர்களின் குடிசையும் பலியானது.

பசியால் துடித்த அம்மக்களைக் கண்டு, ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபாஜி அடைந்த வேதனைக்கு, ஓர் அளவே இல்லை. தனக்கு உணவிட்டு வளர்த்து வந்தவரின் குடும்பம், பசியால் வாடுவதைக் கண்டு மனம் பொறுக்க இயலாத பாபாஜி, அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில், ஒரு தீர்மானத்தை மேற்கொண்டார். 1881 ஆம் ஆண்டு அவர் தமது 20-வது வயதில் நாக்பூரில் இராணுவப் படையின் (Nagpur Regiment) 13-வது பிரிவில் இணைந்து பயிற்சி பெற்றார்.

இராணுவ படையில் தனது பணியை சிறப்பாக ஆற்றியதற்காக அவருடைய குழுவிற்கு அவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் உலகம் முழுவதும் உள்ள அனைத்து வல்லரசு நாடுகளான பிரான்ஸ், இங்கிலாந்து ஆகியவற்றில் இராணுவப் பயிற்சி பெறுவதற்காக அவர் தலைமையில் அமைந்த குழு அனுப்பி வைக்கப்பட்டது.

ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபாஜி எந்த நாட்டிலிருந்தாலும், தமது பணி நிறைவடைந்ததும் தனிமையில் அமர்ந்து கொண்டு இறைவனுடைய நாமத்தை தொடர்ந்து ஜெபித்துக் கொண்டு இருப்பார். அவர் தன்னுடன் பணிபுரிந்த அமெரிக்க இராணுவ அதிகாரியான திருவாளர் பென்ஸ் என்பவருக்கு திருகுர்ஆனின் விளக்கத்தை அற்புதமாக எடுத்துரைத்தார்.

மற்றொரு இராணுவ அதிகாரியான திருவாளர். வில்லியம் என்பவர், தாஜுத்தீன் பாபாவின் உபதேசத்தில் ஈர்க்கப்பட்டு, ஆன்மீகத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவர் தமது பணியைத் துறந்து விட்டு, இந்தியாவிற்கு வந்து கல்கத்தாவில் தமது வாழ்நாள் வரை ஆன்மீக பணியில் ஈடுபட்டார். வில்லியம் அவர்களின் நினைவுச்சின்னம் (Mr. Williams Domp) கல்கத்தாவில், அவருடைய சமாதியில் இன்றளவும் அமைந்துள்ளதை நாம் காண இயலும். 1884-வது வருடம் பாபாஜி அவர்களின் தலைமையிலான குழு சாகர் என்ற இடத்தை அடைந்தது. தன்னுடைய பணியில் நேர்மையாக இருந்த போதும் அவர் ஒரு நாளும் தொழுகை செய்ய தவறியதில்லை.

அவருடைய இறை நம்பிக்கையையும், ஆத்ம பலத்தையும் கண்டு அனைவரும் வியந்தனர். ஒருநாள் அவர் நடந்து சென்று கொண்டிருந்தபோது, எங்கிருந்தோ ஓர் இனிமையான ஒலி அவரை அழைப்பது போல் தோன்றியது. அக்குரல் வந்த திசையை நோக்கி அவர் நடக்கத் தொடங்கினார். மனித நடமாட்டமே இல்லாத ஓர் பகுதிக்கு அந்தக் குரல் அவரை அழைத்துச் சென்றது. அந்த இடத்தில்தான் மிக பிரபலமான ஹாஷீமி வம்சத்தைச் சேர்ந்த, ஹஸ்ரத் தாவூத் மக்கி சிஸ்தி என்ற அவுலியா வாழ்ந்து வந்தார். அன்று முதல் அம்மகானுக்கு, சேவை செய்வதிலேயே பொழுதைக் கழித்து வந்தார். அங்கு நீண்ட நேரம் தியானத்தில் ஈடுபட்டார்.

இராணுவ பணி நேரம் போக, மீதம் உள்ள நேரம் முழுவதும் அம்மகானின் கூட்டுறவிலேயே இருந்து வந்தார். இரவு தூங்கும் வேளை மட்டுமே, தமது பணி இடத்தில் அமைக்கப்பட்டிருந்த கூடாரத்திற்கு செல்வார். சில நாட்களில் இரவு வேளையும் அம்மகானுடனேயே கழித்து வந்தார். அவரை வளர்த்து வந்த அவருடைய அன்னையின் தாயாருக்கு, பாபாஜியின் இத்தகைய பற்றற்ற நிலையைக் குறித்த விவரங்கள் இராணுவ முகாமிலிருந்து தெரிவிக்கப்பட்டது.

இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த பாட்டியார், விரைந்து அவரைக் காண சாகர் நகருக்கு வந்தார். பாபாஜியைக் கண்டதும், அவருடைய நடவடிக்கையில், மாறுதல் ஏற்பட்டதை உணர்ந்து கொண்டார். ஒரு வேளை அவரை ஏதாவது தீய ஆவி பற்றிக் கொண்டதோ என்று எண்ணி அச்சம்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொண்டார். அதைச் சோதிப்பதற்காக அன்று இரவு பாபாஜி அறியாமல் அவரை பின் தொடர்ந்து சென்றார். ஆனால் பாபாஜி ஹஸ்ரத் தாவூத் ஷா என்ற அவுலியாவுடன ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்து இருப்பதைக் கண்டார்.

அப்போது அவருடைய முகத்தில் தோன்றிய பிரகாசமான ஒளி, அவருடைய பாட்டியாரை ஆச்சரியப்படுத்தியது. மறுநாள் காலை தாஜுத்தீன் பாபாஜி, சிறிது நாட்கள் ஓய்வு எடுப்பதற்காக, ராணுவ முகாமிலிருந்து, அவருடைய இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். நீண்ட காலத்திற்குப் பின் பாபாஜி இல்லம் திரும்பியதால், அவருடைய உறவினர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

பலவகையான உணவுப் பதார்த்தங்கள் பாபாவிற்குப் பரிமாறப்பட்டன. அப்பொழுது, அவருடைய உறவினர்களை வழியனுப்பி வைத்து, பாபாவின் பாட்டியார், அவருக்கு அன்புடன் உணவு பரிமாறினார். அப்போதுதான் பாபாஜி அங்கு ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார். அவர் பாட்டியாரிடம் "நீங்கள் எனக்காக தயாரித்த இவ்வுணவைவிட, இதோ என் கைகளில் இருக்கும் இரண்டு சுவைமிகுந்த பண்டங்களே நான் விரும்பும் உணவாகும்!" என்று கூறினார்.

இதைக்கேட்ட அவருடைய பாட்டியார், அப்படி என்ன சுவை மிகுந்த பண்டம் அவர் கையில் இருந்து விடப்போகிறது? என்ற ஆர்வத்தில், அவர் கையை நோக்கினார். பாபாஜி தமது கைகளில் இருந்த, இரண்டு பெரிய கூழாங்கற்களை, தமது வாயில் போட்டுக் கொண்டு நிதானமாக மென்று, சுவைத்து உண்டார். இக்காட்சியைக் கண்ட அவருடைய பாட்டியார் அதிர்ச்சியில் உறைந்து நின்றார். கூழாங்கற்களை மென்று உண்ணக்கூடிய நிகழ்வு, பாபாஜியின் யோக ஆற்றலின் வெளிப்பாடாகும் என்பதை உணர்ந்து கொண்டார்.

பாபாஜி மிக உயர்ந்த நிலையை அடைந்தார் என்பதையும் அவருடைய பாட்டியார் மட்டுமே புரிந்து கொண்டார். அவர் புரிந்து கொள்வதற்காக மட்டுமே பாபாஜி அந்த அற்புதத்தை நிகழ்த்தினார். தன்னைக் குறித்து அவருடைய பாட்டியார் மிகுந்த கவலை கொண்டுள்ளதை அவர்

NOT FOR SALE

அறிந்திருந்தார். ஆகையால் வயதான மூதாட்டியின் கவலை நீங்க, இந்த அற்புதத்தை நிகழ்த்தினார்.

சிறிது காலத்திற்குப் பின் பாபாஜியின் ஆன்மீகப் பயணத்தில் அவரை உயர்ந்த நிலையை அடையச் செய்த, சாகர் பகுதியைச் சேர்ந்த பிரபல அவுலியாவான ஹஸ்ரத் தாவூத் மக்கி சிஷ்தி என்ற அவுலியா சமாதி நிலையை அடைந்து விட்டார். பாபாஜி தொடர்ந்து பல மாதங்கள் அவருடைய நினைவிடத்தில், தமது ஆன்மீகப் பயிற்சியைத் தொடர்ந்தார்.

அம்மகானின் சந்திப்பு, தாஜுத்தீன் பாபாவின் ஆன்மீக பயணத்தில் மிக முக்கியமான இரண்டாம் படியாக விளங்கியது. அவருடைய முதல் இறை அனுபவம் அப்துல்லா என்ற அவுலியாவால் அவருக்கு ஆறு வயதில், ஏற்பட்டதை நாம் முன்னரே கண்டோம். பாபாவின் தீவிர தியானப் பயிற்சியின் காரணமாக, அதற்கு மேலும் இராணுவப் பணியில் அவரால் ஈடுபட முடியவில்லை.

இக்கருத்தை உறுதி செய்வதற்காக இறைவனே ஒரு அற்புதமான நாடகத்தை இராணுவ முகாமில் நிகழ்த்தினார். இராணுவப் படையில் பாபாஜி அவர்களுக்கு ஆயுதக் கிடங்கின் அதிகாரியாகப் பொறுப்பு அளிக்கப்பட்டிருந்தது. ஒருநாள் பாபாஜி இரவு பணியில் ஈடுபட்டிருந்தார். இரவு பணியில் ஈடுபட்டவர்களை கண்காணிக்க ஆங்கிலேய அதிகாரி ஒருவர் அங்கு வந்தார்.

ஆயுதக் கிடங்கின் பொறுப்பை வகித்த பாபாஜி அவர்கள், இருக்கையில் கூட அமராமல் தமது பணியைச் செய்து கொண்டிருந்தார். அதைப் பார்த்த அந்த அதிகாரி மகிழ்வுடன், நேராந்து பணியில் ஈடுபட்டார். அப்பொழுது அந்த முகாமிலிருந்து, சிறிது தொலைவில் அமைந்துள்ள, ஒரு மசூதியின் வாசலில் நம் பாபாஜியைக் கண்டார். அவர் உடனே விரைந்து அருகில் சென்று பார்த்தார்.

அங்கு பாபாஜி கண்களை மூடியபடி, இறை உணர்வில், பரவச நிலையில் இருந்ததால், அவரைச் சுற்றியிருந்த எந்த நிகழ்வும் அவரை பாதிக்கவில்லை. இக்காட்சியைக் கண்ட

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அதிகாரி, இரவு பணியில் ஈடுபட்டவர். பணியை அலட்சியம் செய்துவிட்டு, தொழுகை செய்து கொண்டிருக்கிறார்.

நாம் இப்போதே ஆயுதக்கிடங்கில் சென்று, அங்கு எவரும் இல்லை என்ற குறிப்பை எழுதி வைத்து விடுவோம். மேலும் இவர் மேல் நாளை விசாரணை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறெல்லாம் சிந்தித்தப்படி அவர் விரைந்து ஆயுதக் கிடங்கின் அருகில் வந்தார். என்ன ஆச்சரியம்! அந்த அறையில் பாபாஜி அமர்ந்து கொண்டிருந்தார்.

அருகில் சென்று பார்த்தபோது அவர் திடுக்கிட்டார். அப்படியானால் அங்கு மசூதியில் தொழுகை செய்து கொண்டிருப்பவர் யார்? அந்த அதிகாரி மீண்டும் விரைந்து மசூதிக்குச் சென்றார். அங்கு நம் பாபாஜி பேரானந்தமாக இறைவனோடு ஐக்கிய நிலையில் இருந்தார். இப்போது அந்த அதிகாரி அச்சத்துடன் மறுபடியும் விரைந்து ஆயுதக்கிடங்கின் அருகில் சென்றார். அங்கு பாபாஜி இருந்த அறைவாசலில் சென்றபோது, உள்ளிருந்து பாபாஜி யாரது? என்று கேட்டார்.

பாபாஜியின் கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்று புரியாமல், அவர் விரைந்து தமது இருப்பிடத்திற்கு சென்று விட்டார். அன்று இரவு முழுவதும் அவருக்கு உறக்கம் வரவில்லை. இது எவ்வாறு சாத்தியமாகும்? ஒருவர் ஒரே சமயத்தில் இரண்டு இடங்களில் எப்படி காட்சியளிக்க முடியும்? அப்படியென்றால் தாஜுத்தீன் என்ற இவர் யார்? மனம் முழுவதும் திரும்பத் திரும்ப இதே கேள்விகள் அவரை துளைத்தெடுத்தன.

மறுநாள் இராணுவ முகாமின் உயர்மட்ட குழுவினர், பாபாஜியை விசாரணைக்கு அழைத்தனர். பாபாஜி அங்கு சென்றபோது, அதிகாரிகள் அவரிடம் "ஒரே சமயத்தில் இரண்டு இடங்களில், உங்கள் உருவத்தைக் கண்டதாக எங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது! இது உண்மையா? அவ்வாறு உண்மையானால், இது எவ்வாறு சாத்தியம்? அப்படியானால் நீங்கள் யார்?" என்று கேட்டனர்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பாபாஜி தம்முடைய பயணத்தை இறைவன் தீர்மானித்து விட்டதாக உணர்ந்து கொண்டார். அதிகாரிகள் கேட்ட கேள்விகளுக்கும் அவர் பதில் அளிக்கவில்லை. அவர் உடனடியாக விரைந்து சென்று, தமது அறையில், இராணுவத்தில் தமக்கு அளிக்கப்பட்ட உடைகள், முத்திரை, ஆயுதம் இவை அனைத்தையும் எடுத்துக் கொண்டு வந்தார்.

அதிகாரிகளின் அறையில் நுழைந்த பாபாஜி அவர்களிடம் "நீங்கள் கூறுவது சரிதான்! ஒரே சமயத்தில் இரண்டு வேலைகளை என்னால் செய்ய இயலாது! நான் இறைவனை இதயத்தில் ஏற்றுக் கொண்டு விட்டேன்! ஆகையால் இராணுவப் பணியை ராஜினாமா செய்கிறேன்!" என்று கூறி, தனது ராஜினாமா கடிதத்தை எழுதி அளித்துவிட்டு, அனைவருக்கும் வணக்கம் தெரிவித்து விட்டு, அங்கிருந்து விடைபெற்றார்.

பொதுவாக இறைஉணர்வில் திளைப்பவர்கள், உலகியல் ரீதியான பற்றிலிருந்து முற்றிலும் விடுபட விரும்புவார்கள். இந்நிலை எல்லாருக்குமே வாய்க்காது. இது உடனடியாக ஏற்படும் உணர்வோ அல்லது எடுக்கப்படும் தீர்மானமோ அல்ல! இந்த உணர்வு தக்க சமயத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கும். சமயம் வரும்போது அவற்றைத் தடுக்கவோ அழிக்கவோ அல்லது வேறு திசையை நோக்கி செலுத்த எவருக்குமே இயலாத காரியமாகும்.

பாபாவைப் போன்ற மாபெரும் மகான்கள் இச்சமூகத்தில் இறைச் சிந்தனையை பரவச் செய்வதற்காகவே அவதாரம் எடுத்தனர். அவர்கள் தமது தனிப்பட்ட வாழ்க்கையைக் குறித்து என்றுமே நினைத்ததில்லை. பாபாஜி இராணுவப் பணியைத் துறந்து, இறைப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

சிறிது நாட்களில் இராணுவ முகாமிலிருந்து, அவரது இல்லத்திற்கு ஒரு கடிதம் வந்தது, அதில் பாபாஜி அவர்கள் இராஜினாமா செய்ததற்கான காரணம் தெரிவிக்கப்பட்டது. அக்கடிதத்தில் பாபாஜி மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

குறிப்பிடப் பட்டிருந்தது. பொதுவாக இராணுவ பயிற்சியிலிருந்து ஒருவரை விடுவித்தால் அதற்கான காரணத்தை அவர்கள், கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

தாஜுத்தீன் பாபாஜி மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பதால் அவர் தொடர்ந்து இராணுவத்தில் பணி செய்ய தகுதியற்றவர் என்று ஓர் தவறான செய்தியை, ஆங்கிலேய அரசு அவருடைய உறவினருக்கு தெரிவித்து விட்டது. இச்செய்தியை படித்த அவரின் உறவினர்களும் அவ்வூரின் முக்கிய பிரமுகர்களும் அதிர்ச்சி அடைந்தனர். பாபாஜியை மிகச் சிறந்த மருத்துவரிடம் அழைத்துச் சென்றனர்.

அவருடைய வித்தியாசமான நடவடிக்கைகளைக் கண்டு தீய ஆவிகளை விரட்டும் மந்திரவாதியிடமும் அவரை அழைத்துச் சென்றனர். அவர்கள் பாபாஜியின் உயர்ந்த ஆன்மீக நிலையை உணர்ந்து கொள்ள இயலாமல், அவரை பல்வேறு வகையில் சித்திரவதை செய்தார்கள். அவை அனைத்தையும் பாபாஜி பொறுமையாக ஏற்றுக் கொண்டார்.

மருத்துவர்களும் தம்மால் இயன்ற பல்வேறு சிகிச்சைகளை தொடர்ந்து அளித்தனர். அதிர்ச்சி வைத்தியம் (Shock Treatement) என்று சொல்லக்கூடிய மிகக் கடினமான சிகிச்சையை அவருக்கு அளித்தனர். இத்தகைய துன்பங்களை தமக்கு அளித்த போதும், பாபாவின் மனநிலையும், உடல்நிலையும் சிறிதளவும் பாதிக்கவில்லை. அவர் எப்பொழுதும், ஏகாந்த நிலையில் (பரவச நிலை) இருந்தார்.

இறைவனுடைய, திருவருளாலும், குருவின் கருணையாலும், அவர் முற்றிலுமாக தன் நிலையை அறிந்தவராகவும், சித்தராகவும் காட்சியளித்தார். தன்னுடைய இல்லத்தை துறந்து, வானமே கூரையாக, பசி, உறக்கம் என்ற நிலைகளைக் கடந்து காம்தி நகர தெருக்களில் உலவ ஆரம்பித்தார். அன்று முதல் அப்பகுதி வாழ் மக்கள் அவரை பைத்தியம் என்று அழைக்கத் துவங்கினர்.

இராணுவத்தில் உயர்ந்த பொறுப்பில் இருந்தவரும், ஆன்மீகத்தில் பலருக்கும் வழிகாட்டியாக இருப்பவருமான ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபாஜியை தற்பொழுது மக்கள்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அனைவரும் சித்தம் கலங்கியவர் என்று அழைக்க துவங்கினர். இதைக் காட்டிலும் வேதனையைத் தரக்கூடிய நிகழ்வு ஒன்று அங்கு நடந்தது. மிகச் சிறந்த இராணுவ அதிகாரி என்று போற்றப்பட்ட அவர், தற்போது கிழிந்த ஆடைகளுடன், சிரித்தபடியே தெருக்களில் ஆனந்தமாக உலவிக் கொண்டிருந்தார்.

அவ்வூரில் உள்ள குழந்தைகள், தெருக்களில் அவரை சுற்றி நின்றுக் கொண்டு கற்களால் அடித்து விரட்டி துன்புறுத்தினார்கள். இக்காட்சியை வரைவதற்கு அடியேனுக்கு மனம் சம்மதிக்கவில்லை. அனைவரும் தன்னை கற்களைக் கொண்டு தாக்கிய போதும் பாபாஜி புன்னகையோடு, அவை அனைத்தையும் ஏற்றுக்கொண்டார்.

அதுமட்டுமில்லாமல் அவரை மேலும் துன்புறுத்துவதற்கு அவ்வூர் குழந்தைகள் கற்களைத் தேடிய பொழுது தாமாகவே முன்வந்து கற்கள் நிறைந்து இருந்த பகுதியை காண்பித்தார். இக்காட்சியைக் கண்ட அவர் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்த சிலர், கல் எறிந்த அச்சிறுவர்களைத் தண்டித்தனர். அதைக் கண்ட கோபம் கொண்ட பாபாஜி சிறுவர்களை தண்டிக்கக் கூடாது என்று உத்தரவிட்டார்.

தாஜுத்தீன் பாபாஜி நான்கு வருடங்களை இத்தகைய பரவச நிலையில் கழித்தார். இச்சமயத்தில் அவருடைய பாட்டியாரும் காலமாகிவிட்டார். அவருடைய தாய்மாமாவான அப்துல் ரகுமான் என்பவர் அவரை சன்ஸ்தான் (Sansthan) என்ற இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கும் அவருடைய மனநிலையை சரிசெய்வதாகக் கூறி, அவருக்கு பல்வேறு சித்திரவதைகள் அளிக்கப்பட்டன. ஆனால் அம்முயற்சியும் தோல்வியடைந்ததால் அவருடைய தாய்மாமாவும் அவரை கைவிட்டு விட்டார்.

இப்பொழுது நம் தாஜுத்தீன் பாபாஜி சுதந்திர பறவையாக, கம்தி நகரம் முழுவதும் சுற்றி வந்தார். இரவு பொழுதுகளில், தெருவில் வசிக்கும் விலங்குகளுடன் சேர்ந்து உடைந்த மதகு பாலத்தின் அடியில் படுத்துக் கொள்வார். சுட்டெரிக்கும் வெய்யிலும், கொட்டும் மழையும் அவரை ஒன்றும் செய்யவில்லை.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தண்ணீருக்காகவும், உணவுக்காகவும் எவரிடமும் யாசிக்காமல், பல நாட்கள் பட்டினியாகவே இருந்தார். எவராவது தமக்கு உணவு அளித்தால் அதை தெருவில் உள்ள நாய்களுக்கு அளித்து விடுவார். சிறிது நாட்களில் தான் அணிந்து இருந்த ஆடையும் அவசியமற்றது என்று கருதி களைந்து எறிந்து விட்டார்.

ஆத்மாவின் ஆடையாக இந்த உடல் இருக்கும் பொழுது, வேறு ஆடையை ஏன் தேடவேண்டும்! அவ்வாறு நான்கு ஆண்டுகள், இறை சிந்தனையைத் தவிர எல்லாவற்றையும் மறந்த நிலையில், உறவினர்களும், நண்பர்களும், அவ்வூர் மக்கள் அனைவரும் புறக்கணித்த நிலையில், இறைவன் ஹஸரத் தாஜுத்தீன் பாபா அவர்களின் தெய்வீக ஆற்றலை இவ்வுலகிற்கு வெளிப்படுத்த துவங்கினார்.

பாபாஜியின் அற்புதங்கள் துவங்குவதற்கான சமயம் இப்போது வந்துவிட்டது. அவர் தம் வாழ்நாளில் எண்ணற்ற அற்புதங்களை நிகழ்த்தி உள்ளார். இந்த அற்புதங்கள் யாவும் பொதுமக்கள் அனைவரின் முன்னிலையிலும் நிகழ்த்தப்பட்டதாகும். இவ்வுலகில் இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்திலும் சுயநலத்தின் உச்சகட்டமாகத் திகழ்வது மனித குலம் மட்டுமே. இத்தகைய மனித குலம், தமது தேவையை நிறைவேற்றிக்கொள்ள, எச்செயலையும் செய்யத் துணிந்தவர்கள் ஆவார்கள்.

இத்தனை ஆண்டுகள், இறை அவதாரமான, நம் தாஜுத்தீன் பாபாவை உணர்ந்து கொள்ளத் தவறி, அவரை துன்புறுத்தி, கற்களால் தாக்கி பைத்தியம் என்று நகைத்து வேடிக்கை பார்த்தார்கள். இன்று அவரிடம் உள்ள அரிய சக்திகளைக் கொண்டு, அனைவரும், தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக, அவர் வரவை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஞானியரும், மகான்களும் பல ஆண்டுகள் தவம் செய்து, தாம் பெற்ற வரங்களை, மனித குலத்தின் நலனுக்காக, சிறிதும் சிந்திக்காமல் வாரி வழங்குகின்றனர். இதுவே ஞானியரின் உயர்வான தன்மையாகும். சாமான்ய மானுடரிடம்,

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இப்படிப்பட்ட தன்மையை ஒருபோதும் எதிர்பார்க்க இயலாது.

ஒருநாள் தாஜுதீன் பாபாஜி, காம்தி நகரின் பிரதான சாலை ஒன்றில் மிகவும் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தார். மகான்களின் ஒவ்வொரு செய்கைக்கும் ஏதாவது ஒரு காரணம் நிச்சயம் இருந்தே ஆகவேண்டும். திடீரென்று ஒரு பொற்கொல்லரின் வீட்டிற்குள் நுழைந்த பாபாஜி, அவரிடம் சில வார்த்தைகளைக் கூறினார். அதைக் கேட்ட பொற்கொல்லரின் குடும்பத்தினர் அதிர்ச்சியடைந்தனர்.

அவர், "உடனடியாக உன்னுடைய உடைமைகளை எடுத்துக் கொண்டு இந்தக் கட்டிடத்தை காலி செய்வாயாக! இச்செயலை நீ தாமதிக்காமல் சீக்கிரம் ஆற்ற வேண்டும்!" என்று உத்திரவிட்டார். அப்பொற்கொல்லர், பாபாஜியிடம் மிகுந்த மரியாதையும், அன்பும் கொண்டவர். அவர் பாபாவின் உத்தரவிற்கு கட்டுப்பட்டு, சில மணி நேரங்களில், தான் வாழ்ந்த அந்தக் கட்டிடத்தை விட்டு குடும்பத்துடன், அனைத்து பொருட்களையும் எடுத்துக் கொண்டு, புறப்பட்டார்.

அன்று இரவே அக்கட்டிடம் முழுவதும் இடிந்து விழுந்தது. மறுநாள் பொழுது விடிந்ததும், செய்தியைக் கேட்டு, அதைக் காண வந்த அப்பொற்கொல்லரின் குடும்பம் மனம் நெகிழ்ந்து, தம்மையும், தமது குடும்பத்தினரையும் காத்து இரட்சித்த பாபாஜிக்கு நன்றி தெரிவித்தனர். அப்பொற்கொல்லர் தமது வாழ்நாள் முழுவதும் தாஜுதீன் பாபாவின் அடியவராகவே இருந்தார்.

மற்றொரு நாள் பாபாஜி, ஒருவருடைய இல்லத்திற்குச் சென்று உணவை யாசித்தார். அவ்வீட்டின் உரிமையாளர், தூய்மையான உள்ளம் கொண்டவர். ஆனால், அச்சமயம் பாபாஜிக்கு அளிக்க, தன்னிடம் உணவு மற்றும் பழங்கள் எதுவுமே இல்லை, என்பதை உணர்ந்து, அவர் மிகவும் வருந்தினார்.

அவர் பாபாஜியிடம், "இச்சமயத்தில் தமக்கு அளிப்பதற்கு, எனது இல்லத்தில் உணவு எதுவும் இல்லை. பாபா! என்னை மன்னியுங்கள்! என்றார். ஆனால் பாபாஜி அவரை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

விடுவதாக இல்லை! அன்று அவரிடம் ஒரு நாடகத்தை நடத்த தீர்மானித்து விட்டார்." ஏன் என்னிடம் நீ பொய்யுரைக்கிறாய்? உனது வீட்டின் சமையலறையில், ஒரு சிறிய பாத்திரத்தில், உணவை மூடி பத்திரமாக வைத்து விட்டு, என்னிடம் இல்லை என்று சொல்கிறாயா!

இவ்வாறு பாபாஜி கூறியதும் திகைத்த, அந்த இல்லத்தின் உரிமையாளர், இது எவ்வாறு சாத்தியமாகும்? என்று நினைத்துக் கொண்டு, தனது சமையலறைக்கு விரைந்து சென்று, நாலாபுறங்களிலும் தேடினார். என்ன ஆச்சரியம்! அங்கு ஒரு ஓரத்தில், சிறிய பாத்திரத்தில், சில ரொட்டித் துண்டுகள் மூடி வைக்கப்பட்டிருந்தன.

தனது இல்லத்தில் தனக்கே தெரியாமல் இச்செயலை எவர் செய்திருப்பார்கள்! அச்சமயம் அவருடைய குடும்பத்தினர், எல்லோரும் வெளியூர் சென்றிருந்தனர். எங்கும் நிறைந்த இறைவனின் அவதாரமான பாபாஜி, தனது இல்லத்தை ஆசீர்வதிக்க வந்திருப்பதை அவர் உணர்ந்து கொண்டார். மகிழ்ச்சியுடன் அந்த உணவை பாபாவிற்கு அளித்து அவரை வணங்கி ஆசீர்வாதம் பெற்றார்.

**விழுவதாக இருந்தால் விழட்டும் தாஜுத்தீன் இருக்கும் போது கவலை ஏன்?**

பாபாஜி காம்தி நகரத் தெருக்களில் வலம் வந்த சமயம், மதராஸைச் (சென்னை) சேர்ந்த ஒருவரின் குடும்பம், அங்கு வசித்து வந்தது. அக்குடும்பத் தலைவர் பாபாவுடன் சேர்ந்து உணவு அருந்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பாபா கால தாமதமாக வந்தாலும், அவருக்காக தனது வீட்டு வாசலில் காத்துக் கொண்டிருப்பார்.

இத்தகைய உண்மையான பக்தியைக் கண்டு மகிழ்ந்த பாபா, அக்குடும்பத்தினர் அனைவரின் உயிரையும் காப்பாற்றி, ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார். ஒருநாள் பாபா, மதராஸ் குடும்பத்தினருடன் உணவருந்திக் கொண்டிருந்தபோது, குடும்பத் தலைவரிடம், "விழுவதாக

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இருந்தால் விழட்டும்! தாஜுதீன் இருக்கும் போது கவலை ஏன்?" என்றார். அவர் கூறியதன் அர்த்தம் புரியாவிட்டாலும், பாபா நமக்கு நன்மையே செய்வார் என்ற நம்பிக்கையுடன், அவர்கள் இருந்தனர்.

அன்று இரவே அவர்களின் வீட்டின் கூரை கீழே விழுந்து விட்டது. அருகில் எரிந்துக் கொண்டிருந்த தீயானது காற்றில் வேகமாகப் பரவி வீடு முழுவதும் பற்றிக் கொண்டது. ஆனால் அக்குடும்பத்தினருக்கு, சிறு காயம் கூட ஏற்படவில்லை. தாஜுதீன் இருக்கும் போது கவலை ஏன்? (Girta Hai Tho Gir, Tajudeen Tho Hai) என்பதன் முழுமையான அர்த்தத்தை உணர்ந்து, அவர்கள் பாபாவிற்கு நன்றியை தெரிவித்தனர்.

**மூன்று குழந்தைகளுக்கு வரம் அளிக்கிறேன் என்றார் :**

மதுராஸி குடும்பத்தினரின் உயிரைக் காப்பாற்றியவுடன், அரசிடமிருந்து வீடு இடிந்ததற்கான, இழப்பீட்டுத் தொகையும் அவர்களுக்குக் கிடைத்தது. அத்தம்பதியருக்கு நீண்ட காலமாக குழந்தை பேறு இல்லை. ஒருநாள் பாபா சந்தோஷமாக சிரித்துப் பேசிக் கொண்டிருக்கும் போது, "இந்த ஜென்மத்தில் ஒரு குழந்தையைப் பெறும் பாக்கியத்தையாவது அளியுங்கள் பாபா!" என்று அந்த அம்மையார் பாபாவிடம் மன்றாடி வேண்டிக் கொண்டார்.

"உடனே எவரும் எதிர்பாராதவிதமாக, பாபா அவரிடம் ஒன்று ஏன்? மூன்று குழந்தைகள் உனக்கு பிறக்க, தாஜுதீன் ஆசி அளிக்கிறேன்!" என்றார். மகான்களிடம் நமது நியாமான கோரிக்கையை, தூய்மையான உள்ளத்துடன் வைக்கும்போது அவர்கள் மகிழ்ந்து அதன் பலனை பல மடங்கு அதிகமாக நமக்கு அளிப்பார்கள் என்பதை நிரூபித்தார். ஒரு குழந்தை வரத்தைக் கேட்ட தம்பதியினருக்கு, மூன்று குழந்தைகளுக்கான வரத்தை அளித்த, பாபாவின் கருணை அளவிட இயலாதது.

**வெற்றிச் செய்தியுடன் வருவாயாக... :**

பாபாவை காம்தி நகரில் சித்தப்பிரமை கொண்டவர் என்று முதலில் அனைவரும் நினைத்தனர். ஆனால்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

காலப்போக்கில், அவர் ஒரு மாபெரும் மகான். என்பதை நிகழ்ந்த அற்புதங்களின் மூலம் உணர்ந்து கொண்டனர். ஒரு மார்வாடி, தன் மீது ஒருவர் தொடுத்த வழக்கில், நீதிமன்றத்தில் அன்று தீர்ப்பு அறிவிக்கப்பட உள்ளது.

அவர் அத்தீர்ப்பை கேட்பதற்காக, கவலையுடன் நீதிமன்றத்திற்கு விரைந்து சென்று கொண்டிருந்தார். அவர் பாபாவை கடந்து சென்ற போது, ஒரு மதகு பாலத்தில் பாபா அமர்ந்து கொண்டிருந்தார். விரைவாகச் சென்ற மார்வாடியைப் பார்த்த பாபா, உரத்த குரலில் சிரிக்க ஆரம்பித்தார். மார்வாடி, ஏற்கனவே கவலையுடன் சென்று கொண்டிருந்த காரணத்தால், தன்னைப் பார்த்து சிரித்த பாபாவை கோபத்துடன் திரும்பிப் பார்த்தார்.

பாபா அவரிடம் "என்ன பார்க்கிறாய் சேட்டு? உன் மீதான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது! நிம்மதியாகச் சென்று, வெற்றி பெற்ற செய்தியுடன் வருவாயாக!" என்றார். இதைக் கேட்டு ஆச்சரியமடைந்த மார்வாடி, பைத்தியம் போன்று கிழிந்த ஆடையுடன், இவ்வாறு அமர்ந்து கொண்டிருக்கும் ஒருவர்,என் மீதுள்ள வழக்கை எவ்வாறு அறிந்து கொண்டார்? என்று சிந்தித்தார். அவர் நீதிமன்றத்திற்கு சென்று தீர்ப்பை தெரிந்து கொண்டு வருவோம்! என்று எண்ணி விரைந்து சென்றார்.

நீதிமன்றத்தில் பாபா கூறியவாறே, அவர் மீதுள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்று நீதிபதி தீர்ப்பளித்தார். இதைக் கேட்டு ஆச்சரியமடைந்த மார்வாடி, இத்தீர்ப்பை ஒரு மணி நேரம் முன்னதாகவே மதகு பாலத்தில் அமர்ந்து கொண்டிருந்த பாபா கூறியதை நினைத்து வியந்தார்! அப்போதுதான் பாபா சித்தபிரமை கொண்டவர் அல்ல என்றும், அவர் ஒரு மிகப்பெரிய தீர்க்க தரிசி என்பதையும் உணர்ந்து கொண்டார்.

நிறைய இனிப்பு பதார்த்தங்களை வாங்கிக் கொண்டு, பாபா அமர்ந்திருந்த பாலத்தின் அருகில் வந்தார். பாபா, அவர் வாங்கி வந்த இனிப்புகள் அனைத்தையும், அங்கு விளையாடி

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல
NOT FOR SALE

கொண்டு, தம்மீது கற்களை எறிந்து கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு வழங்குமாறு கூறினார். இதைக்கேட்டு திகைத்த மார்வாடி, இவ்வளவு கருணை உள்ளத்துடன் இவ்வுலகில் ஒருவர் இருக்க முடியுமா! என்று வியந்து, பாபாவிற்கு தமது நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபாவின் அற்புதங்கள், அப்பிரதேசம் முழுவதும் பரவியது. மக்கள் பல இடங்களில் இருந்தும் அவரைத் தேடி வரத்தொடங்கினர். ஆனால் தம்மை நாடிவரும் மக்களில், உண்மைக்கு புறம்பான செயலில், ஈடுபடும் நேர்மையற்றவர்களை, அவர் திரும்பிச் சென்றுவிடுமாறு எச்சரித்தார். தூய உள்ளம் கொண்டவர்கள், அவருடைய ஆசீர்வாதம் பெற்று, அதன் மூலம் பல நன்மைகளை அடைந்தனர். நாக்பூர் என்ற நகரமே, தாஜுத்தீன் பாபாவால் இன்று உலகப் புகழ்பெற்றுள்ளது.

ஒரு சில நாட்களில் பாபாஜி மக்களின் பேராசையைக் கண்டு, மனம் வெறுத்து, அவ்விடத்தை விட்டு போக நினைத்தார். தாம் பொதுமக்களின் பார்வையிலிருந்து விலகி சிலகாலம் தனிமையில் இருக்க விரும்பினார். அதற்குக் காரணம், அவரை தரிசிக்க வந்த பெரும்பாலான மக்கள், திரும்ப திரும்ப, இவ்வுலக வாழ்க்கைக்குரிய பொருட்களையே அவரிடம் யாசித்துக் கொண்டிருந்தனர்.

மேலும் அவரிடம், பல அற்புதங்களை செய்து காட்டும்படி, வற்புறுத்த ஆரம்பித்தனர். மகான்களின் மகத்துவத்தைப் பூரணமாக அறியாதவர்கள். அவர்களை, தெருவில் செப்படி வித்தை காண்பிக்கும் வித்தைக் காரர்களாகவே நினைத்துக் கொள்கிறார்கள்!

மகான்கள் அவசியமின்றி, தமது பெருமையை நிரூபிக்க அற்ப வித்தைகளை ஒருபோதும் புரிய மாட்டார்கள். அவ்வூர் மக்களின் வற்புறுத்தலைக் தாங்க இயலாமல், ஒருநாள் பாபாஜி அம்மக்களிடம், நான் நாளைமுதல், மனநோயாளிகளுக்கான மருத்துவமனைக்குச் சென்று, அங்கேயே தங்கி விடுவேன்! இனியும் என்னால் இங்கு அமர இயலாது! என்று கூறினார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இதைக் கேட்ட அம்மக்கள், பாபாஜி ஏதோ விளையாட்டுக்காக, இவ்வாறு கூறி வருகிறார்! இதுவரை அவரை அனைவரும் சித்தம் கலங்கியவர், என்றே நினைத்துக் கொண்டிருந்தோம்! ஆனால் இப்பொழுது அவர், அனைவரையும் காக்கும் அவுலியா என்பதைப் புரிந்து கொண்டோம்! இப்படியிருக்க அவரை மனநிலை சரியில்லாதவராக எவர் கருதுவார்கள்!

இவரை மருத்துவமனையில் எவரும் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்! என்றெல்லாம் தமக்குள் உரையாடிக் கொண்டிருந்தனர். மகான்களின் வாக்கு ஒரு நாளும் பொய்க்காது! மறுநாள் பாபாஜி, ஒரு விநோதமான செயலைச் செய்தார். ஐரோப்பிய பெண்களுக்கான ஒரு விளையாட்டு மைதானத்தில், திடீரென்று அவதூதராக, ஆடைகள் எதுவுமின்றி, காட்சியளித்தார்.

இதைப் பார்த்த, ஐரோப்பிய பெண்கள், ஆத்திரமடைந்து, காவல்துறையில் புகார் அளித்தனர். பாபாஜி, சித்தம் கலங்கியவர் என்று இராணுவ முகாமில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதால், மனநிலை சரியில்லாத ஒரு நபரை, காவல்துறையினர் சிறையில் அடைக்க இயலாது! இது அரசாங்கத்தின் சட்டமாகும்.

ஆனால், அவரை மீண்டும் வெளியில் நடமாட அனுமதித்தால், ஐரோப்பிய பெண்கள் அளித்த புகாரின் பேரில் நடவடிக்கை எடுக்காத குற்றத்திற்கு, ஆளாவோம் என்ற காரணத்தால், பாபாஜியை அங்கிருந்த மனநிலை மருத்துவமனையில் சேர்த்து, பாதுகாப்பாக வைத்திருக்குமாறு, மாவட்ட நீதிபதி 1892ஆவது ஆண்டு உத்தரவிட்டார்.

காவல்துறையின் உத்தரவிற்கு கட்டுப்பட்டுதானே ஆகவேண்டும்! பாபாவின் வாக்கிற்கேற்ப, அவர் மறுநாளே, மனநிலை மருத்துவமனையில் தனிப்பிரிவின் கீழ் ஒரு அறையில் அடைத்து வைக்கப்பட்டார். அவர் விரும்பிய தனிமை, அவருக்கு கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில், மருத்துவமனையில் தமது த்யானத்தை தொடர்ந்தார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சில சமயங்களில் மகான்களின் செயல்பாடுகளைப் புரிந்து கொள்ள இயலாது! சாமான்ய மக்கள், தாங்கள் நினைத்த கருத்துக்களை, அனைவரிடம் கூறிவிடுவார்கள். இவ்வகையில் பாபாவை தரிசிக்க இயலாத மக்கள், இறைவனே இவ்வாறு சோதிப்பதாகக் கூறி, நிந்தித்து தமக்குள் புலம்பிக் கொண்டிருந்தார்கள். பாபாஜி, தமக்குக் கிடைத்த தனிமையை, இறைவனோடு ஒன்றி, அச்சிந்தனையிலேயே அமைதியாக தனது பொழுதைக் கழித்து வந்தார்.

பாபாஜியை தனி அறையில், பாதுகாப்பாக அடைத்து வைத்திருந்த போதும், அவர் கம்தி நகர தெருவில், பல சமயங்களில் நடந்து செல்லும் காட்சிகளை, மக்கள் பார்த்து வியந்துள்ளனர். இது அவருடைய யோக ஆற்றலின் வெளிப்பாடே ஆகும். தாஜுதீன் பாபா, மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட பொழுது, அவருக்கு 32 வயது ஆகியிருந்தது.

அவர் மீது புகார் அளித்த, ஐரோப்பிய மகளிர்குழு, விளையாட்டுத் திடலில், தமக்குள் விவாதிக்குக் கொண்டிருந்த பொழுது, அவருக்கு கிடைத்த இத்தண்டனையே சரியான தீர்ப்பாகும் என்று அறியாமையால், பாபாவை இகழ்ந்து கேலி செய்தனர். ஆனால், அன்று மாலையே, அவர்கள் கண்ட அக்காட்சியால் செயலழிந்து நின்றனர்.

அவர்கள் காம்தி நகர தெருக்களில், தங்களின் வாகனத்தில், சென்று கொண்டிருந்த போது, திடீரென்று அவர்களின் பார்வையில் படுமாறு, பாபாஜி நடந்து சென்று கொண்டிருந்தார். இக்காட்சியைப் பார்த்த ஐரோப்பிய பெண்கள் குழுவிற்கு, காவல்துறையினர் மீது சந்தேகம் ஏற்பட்டது. அது ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் என்பதால், அவர்களுக்கு கீழ்படிய மறுத்தால் அது எவராக இருந்தாலும் அவர் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும்.

அவர்கள், மாவட்ட நீதிபதியிடம், காவல்துறை, தனது கடமைகளை சரிவர புரியவில்லை! என்று புகார் அளித்தனர். அப்புகாரை பரிசோதிப்பதற்காக, மாவட்ட நீதிபதி, ஐரோப்பிய மகளிர் குழுவினருடன் மருத்துவமனையை அடைந்தார். என்ன

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல


அற்புதம்! அங்கே, பாபாஜி தலைக்காக, ஒதுக்கப்பட்ட தனி அறையில் அவர் அமைதியாக, தியானம் செய்து கொண்டிருந்தார். அவருடைய அறை பூட்டப்பட்டு இருந்தது.

ஒரு நபர், ஒரே சமயத்தில், வெவ்வேறு இடங்களில் எவ்வாறு காட்சி அளிக்க இயலும்? ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்த, ஐரோப்பிய மகளிர் குழு, பாபாஜி ஒரு சாமான்ய மானுடர் அல்லர். மிகப்பெரிய அவுலியா என்பதை புரிந்து கொண்டனர்.

அவரைக் குறித்து தாம் தவறாக பேசியதற்காக மனம் வருந்தினர். அதன் பின்னர், அவருடைய மகிமையை அறிந்த பல ஐரோப்பியர்களும், ஆங்கிலேயர்களும் அவரிடம் ஆசீர்வாதம் பெறுவதற்காக, மருத்துவமனைக்கு வரத் துவங்கினர்.பாபாஜி சிறிது காலத்திற்கு எவரையும் சந்திக்கவில்லை.

இது போன்று, பல முறை பாபாஜியை, காம்தி நகர தெருக்களில், பலரும் பார்த்திருக்கின்றனர். மகான்கள் நினைத்தால் ஒரே சமயத்தில் பல இடங்களிலும் தரிசனம் தருவதும் உண்டு.

ஜெய் பாபா தாஜ்



NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## அத்தியாயம் - 4

**வாக்கி தர்பாரில் பாபா நிகழ்த்திய அற்புதங்கள் :**

ஹஸரத் தாஜுதீன் பாபா, வாக்கியில் நானாஜி என்று தம்மால் அழைக்கப்பட்ட திரு. காசிநாத் பாட்டில் அவர்களின் இல்லத்திற்குச் செல்ல வேண்டும் என்று கூறினார். மகாராஜா, பாபா செல்லும் எல்லா இடங்களுக்கும் பாதுகாப்பு கருதி தனது பணியாளர்களை அனுப்பி வைத்தார்.

ஏனெனில் மகாராஜா, பிரிட்டிஷ் அரசிடம், தாஜுதீன் பாபாவை, வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பதாக வாக்களித்துள்ளார். ஆகையால் மனநல மருத்துவமனையில் இருந்து அழைத்து வரப்பட்டது முதல், மகா சமாதி அடையும் வரை பாபாவின் ஒவ்வொரு பயணத்திலும், மன்னரின் பணியாளர்கள் அவரை தொடர்ந்து சென்றனர்.

இச்சமயத்தில் ஹிராசிங் மகராஜ் அவர்களும், சக்கர்தாராவில் மன்னரின் வேண்டுகோளுக்கிணங்க தங்கியிருந்தார். தாஜுதீன் பாபாவும், ஹிராசிங் மகராஜ் அவர்களும் லக்ஷ்மிநாராயணர் ஆலயத்தில் சந்தித்துக் கொண்டனர். அவர்களுக்குள் எந்த உரையாடலும் நடைபெறவில்லை. மகான்களின் சந்திப்பும், உரையாடலும் ஆத்மாவில் நிகழக்கூடியவை.

ஹிராசிங் மகராஜ் சிரித்துக் கொண்டே, மகாராஜா ராகோஜிராவிடம், ரக்குவா! மகாராஜவான உனக்கு தெரியாத ஒன்று உண்டா? ஒரு மகாராஜாவின் உறையில், இரண்டு வாள் இருக்க இயலாது! என்று கூறினார். இரண்டு வாள் என்பதை அவர் தம்மையும், மகான் தாஜுதீன் பாபாவையும் தான் குறிப்பிடுகிறார் என்பதை மன்னர் புரிந்து கொண்டார்.

ஏழுஉலகங்களையும் தனது உள்ளங்கையில் வைத்து, கட்டுப்படுத்தும் ஆற்றலைக் கொண்டவர், தாஜுதீன் பாபா ஆவார். அவர் ஹிராசிங் மகராஜ் அவ்வாறு கூறியதற்கான

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

காரணத்தை நன்கு அறிவார். இன்னும் சில காலத்தில், ஹிராசிங் மகராஜ் அவர்களுடைய ஜீவசமாதி அவ்விடத்தில் நிகழ இருக்கின்றது அச்சமயத்தில் மற்றொரு மகான் அங்கு வசிக்க இயலாது.

ஆனால் அந்த ரகசியத்தை அவர் மன்னரிடம் வெளிப்படுத்தவில்லை. ஆகையால், அவர் "மன்னரிடம் என் அன்பு சகோதரா! இப்போது நான் இவ்விடத்தை விட்டு சில காலம் செல்லும் சமயம் வந்தது!" என்று கூறினார். இதைக் கேட்ட மன்னரின் மனம் வேதனையில் துடித்தது. பாபா, சகோதரா! நீ ஏன் கவலைப்படுகிறாய்? உனக்கும் எனக்கும் இடையில் உள்ள பந்தம், ஒரு லட்சம் வருடங்கள் கடந்த ஒன்றாகும்.

நான் ஒரு லட்சம் வருடங்கள், சக்கர்தாராவை விட்டு எங்கேயும் செல்ல மாட்டேன்! இது என் வாக்காகும்! என்றார். தற்சமயம் நான் சில வருடங்கள், வாக்கி தர்பாரில் அமர்ந்து விட்டு, மீண்டும் உன்னைத் தேடி இங்கு வருவேன்! ஆகையால், நீ நிம்மதியாக உன்னுடைய பணியை ஆற்றுவாயாக! என்று கூறி வாக்கியை நோக்கிப் புறப்பட்டார்.

பாபா, வாக்கி தர்பாரிலிருந்து, சக்கர்தாராவிற்கு திரும்பும் முன்னரே ஹிராசிங் மகராஜ் ஜீவ சமாதி அடைந்து விட்டார். மகான்கள், மனிதர்களின் அனைத்து ஜென்மங்களையும் அதன் இரகசியங்களையும் அறிந்தவர்கள். ஹிராசிங் மகராஜ் அவர்கள் ஜீவசமாதி நிலையை அடைந்தவுடன் அவருக்கு ஒரு மண்டபம் எழுப்பி, ஒவ்வொரு வருடமும் ஆராதனை விழா நடத்த மகாராஜா ஏற்பாடு செய்துள்ளார். இன்றளவும் ஹிராசிங் பாபாவின் ஆராதனை விழா ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 18 அன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

வாக்கியை சேர்ந்த திரு. காசிநாத் பாட்டில் அவர்கள் 32 கிராமங்களுக்கு ஜமீன்தாராக இருந்தார். அவர் அரசு தரப்பில் மிகப்பெரிய அதிகாரியாகவும் பொறுப்பேற்றிருந்தார். அவர் பல மாதங்களாக கால்வலியால் மிகுந்த அவஸ்தைப்பட்டார்.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

அதற்கான சிகிச்சையைப் பெறுவதற்கு, வாக்கியிலிருந்து 26 கி.மீ. தொலைவிலுள்ள நாக்பூருக்கு மாதம் இருமுறை செல்வது வழக்கம்.

ஜமீன்தார் அவர்கள் தாஜுத்தீன் பாபாவைச் சந்திப்பதற்கு, அவருடைய கால் வலியே காரணமாக அமைந்துவிட்டது. அவர் ஒருமுறை நாக்பூர் வருகை தந்தபோது, அவருடைய நண்பரான மருத்துவர் காசிநாத் பௌளனாஸ்கர் அவர்களை சந்தித்து உரையாடினார். மருத்துவர் காசிநாத் பௌளனாஸ்கர், தமது நண்பரிடம், நீங்கள் ஒருமுறை தாஜுத்தீன் பாபா அவர்களை தரிசனம் செய்யுமாறு வேண்டுகிறேன்! அவருடைய தரிசனம் நிச்சயமாக உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் என்றார்!

மருத்துவர் காசிநாத் பௌளனாஸ்கர் பற்றி நாம் முன்னரே கண்டோம். தாஜுத்தீன் பாபா தங்கியிருந்த, மனநல மருத்துவமனையில் மிக முக்கிய பொறுப்பை வகித்தவர் ஆவார். ஜமீன்தார் தமது நண்பரின் கூற்றை ஏற்றுக் கொண்டார். பாபாவைத் தரிசிப்பதற்காக மனநல மருத்துவமனைக்கு வந்தார். அங்கு பாபாவின் அறைவாசலில் வந்து நின்றார். அவர் மெதுவாக பாபாவின் அறைக்குள் நுழைய முற்படும் பொழுது பாபா அவரைப் பார்த்து விட்டார்.

பாபாவின் பார்வை, தமது உடலில் பட்டவுடன், தமது புலன்கள் அனைத்தும் புத்துணர்ச்சி அடைந்ததை உணர்ந்து கொண்டார். அடுத்த வினாடி, என்ன ஆச்சரியம்! இத்தனை காலமாக இருந்த கால்வலி ஒரே நொடியில் மறைந்து விட்டது. பாபாவின் கருணையால், கால்கள் குணமடைந்ததை அறிந்த ஜமீன்தார் தான் எடுத்து வந்த பட்டு சால்வையைப் பணிவுடன் பாபாவிற்கு போர்த்தி மகிழ்ந்தார்.

அதுவரை மூட்டு வலியால் குனிந்து நிமிர இயலாத அவர் அன்று பாபாவை மண்டியிட்டு வணங்கினார். அப்போது பாபாஜி அவரை அன்போடு நானா! என்று அழைத்தார். பாபாஜி காசிநாத் பாட்டிலை, நானா என்று உறவுமுறை பெயர் சொல்லி அழைத்ததை, ஜமீன்தார் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார். அதுமட்டுமில்லாமல் பாபாஜி, நானா! நான் வாக்கியை நோக்கி

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நிச்சயமாக ஒருநாள் உன்னிடம் வருவேன்! என்றார். நானாஜி என்ற பெயர் பெற்ற ஜமீன்தார், பாபாவிடம் "பிரபு! இதைக் காட்டிலும் வேறு என்ன பாக்கியம் ஒருவருக்கு கிடைக்கும்?

தங்கள் வரவை எதிர்பார்த்து ஆவலோடு காத்துக் கொண்டிருப்பேன்!" என்றார். அன்று முதல் நானாஜி என்ற பெயரே அவருக்கு நிலைத்து விட்டது. பாபாவின் திருவாயில் இருந்து உதிர்த்த பெயரல்லவா! அதன் பின்னர் நானாஜி எப்போது நாக்பூருக்கு வருகை தந்தாலும், மருத்துவமனைக்குச் சென்று சிறிது நேரம் அமர்ந்துவிட்டு ஆசிபெற்ற பின்னரே வருவார்.

மன்னர் ராகோஜிராவ், பாபாஜி, வாக்கி செல்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுத்தார். தனது குதிரை வண்டி ஓட்டுநரான ஹீராலால் தான்வே என்பவரை பாபாவின் சேவைக்காக அளித்துவிட்டார். பாபாஜி, கோச் வண்டியில் ஏறி வாக்கியை நோக்கி புறப்படத் தயாரானார். மகாராஜா அவருக்கு பாதுகாப்பு கருதி தனது மெய்க்காப்பாளர்களையும் அனுப்பி வைத்தார்.

கோச் வண்டி வாக்கி என்ற இடத்தை அடையும் முன்னரே, பட்டாண்சாவங்கி (Pattan Saongi) என்ற பகுதியில் பாபாஜி இறங்கிவிட்டார். பாபா இறங்கியதை கண்டவுடன் ஓட்டுநர் ஹீராலால் தான்வே, பாபாவிடம் "பிரபு! உத்தரவிடுங்கள் இப்போது நான் என்ன செய்யவேண்டும்?" என்றார். பாபா, "ஹீராலால் உனது வண்டியை ஓட்டிச் செல்வாயாக!" என்று கூறினார். பாபா இவ்வாறு கூறியதும், ஹீராலால் தான்வே அவருடைய உத்தரவை ஏற்று சக்கர்தாராவிற்கு திரும்பி விட்டார்.

அப்போது அவரை சூழ்ந்திருந்த மக்களிடம் அவர், "வாக்கா ஜானாஹறி! டஹாக் கேயா!" என்றார். இதன்பொருள், நான் வாக்கியை நோக்கி டஹாகே என்றழைக்கப்படும் நானாஜியின் குடும்பத்தினரிடம் செல்ல விருக்கின்றேன் என்றார். நானாஜியின் குடும்பத்தினருக்கு டஹாகே குடும்பம் என்ற ஒரு பெயரும் உண்டு. மன்னரின் மெய்க்காப்பாளர்கள்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இறுதிவரை தாஜுதீன் பாபாவிற்கு பாதுகாப்பாக இருந்தனர். அவர்களுக்கு உரிய வருமானம் மன்னர் ராகோஜிராவ் அவர்களின் கஜானாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது.

அதே சமயத்தில் வாக்கியில் நானாஜி அவர்களால் நியமிக்கப்பட்ட மெய்க்காப்பாளர்களுக்கு உரிய வருமானம் வாக்கியிலிருந்து தரப்பட்டது. தற்பொழுது பாபாஜி பட்டான்சாவங்கியில் இருப்பதை அறிந்து கொண்ட நானாஜி, உற்சாகமாக நான்கு மாட்டு வண்டிகளில், தமது குழுவினருடன் பாபாஜியை வரவேற்கச் சென்றார்!

நானாவைக் கண்டதும் பாபா மகிழ்ச்சியோடு அவருடைய வண்டியில் ஏறிக் கொண்டார்! மற்ற மூன்று வண்டிகளும் பின்தொடர பாபா வாக்கி என்ற திருத்தலத்தை வந்தடைந்தார். பாபாஜி, வாக்கியை வந்தடைந்ததும் நானாஜியும் அவருடைய குடும்பத்தினரும் பாபாவை புனித நீராடும் இடத்தில் அமர்த்தி, வாசனைத் திரவியங்களோடு கூடிய புனித நீரால் பாபாவை மங்கல நீராட்டினார்கள்.

நானாஜி பாபாவிற்கு தமது இல்லம் முழுவதும் காணிக்கையாக அளித்தார். அங்கு சகல வசதிகளையும் செய்து கொடுத்தார். பாபா அவ்விடத்தில் மூன்று வருடங்கள் தங்கி பல்வேறு அற்புதங்களைப் புரிந்தார். பாபாவை தரிசிக்க ஆயிரக் கணக்கான மக்கள் தினமும் வருகை தந்து கொண்டிருந்தார்கள்.

இதைப்பார்த்த பாபாஜி ஒருநாள் நானாஜியை அழைத்து நான் இன்று முதல் அருகிலுள்ள புளிய மரத்தடியில் தங்கிக் கொள்கிறேன் என்றார்.

அந்த புளியமரம் உள்ள தோட்டம் முழுவதும் நானாஜி அவர்களுக்குச் சொந்தமானது. எனவே நானா, பாபாவிற்கு புளியமரத்தின் அருகில் ஒரு குடிசையை கட்டிக் கொடுத்தார். நானாஜி மகாசிவராத்திரி என்ற புனித நாளில் மத்தியபிரதேசத்திலுள்ள பஞ்சமரி என்ற சிவாலயத்திற்கு ஒவ்வொரு வருடமும் சென்று, தரிசித்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இவ்வருடம் நானாஜி பாபாவிடம், "பிரபு! நான் பஞ்சமரி சென்று மகாதேவரைத் தரிசித்து வர

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அடியேனுக்கு உத்தரவு அளியுங்கள்!" என்று அனுமதி வேண்டினார்.

பாபாஜி உடனடியாக தான் அமர்ந்திருக்கும் புளியமரத்தடிக்கு வருமாறு நானாவிற்கு உத்தரவிட்டார். நானாவும் தமது இல்லத்திலிருந்து புறப்பட்டு, புளியமரத்தடியில் பாபாவைத் தரிசித்தார். அவரிடம் பாபா, நானா உன் கண்களை மூடி, சில வினாடிகள் கழித்து திறப்பாயாக! என்றார்.

பாபாவின் உத்தரவை ஏற்ற நானா, அவ்வாறே தனது கண்களை மூடி சில வினாடிகளில் திறந்து பாபாவை நோக்கினார். அவ்வளவுதான் நானாவின் கண்கள் அந்த திவ்ய ஒளியை தாங்க இயலாமல் கூச ஆரம்பித்தன. நானாஜியின் முன்னர் இப்பொழுது தாஜுத்தீன் பாபா சர்வேஸ்வரரின் உருவத்தில் கையில் திரிசூலம் ஏந்தி பிரகாசமான ஒளியோடு காட்சியளித்தார். இக்காட்சியைக் கண்ட நானாஜி, அப்படியே சிலையாக நின்று விட்டார்.

சர்வேஸ்வரரை தரிசனம் செய்த பாக்கியம் நானாஜிக்கு கிடைத்துவிட்டது. இப்பொழுது மீண்டும் கண்களை மூடி திறந்த பொழுது தாஜுத்தீன் பாபா மட்டுமே அமர்ந்திருப்பதைக் கண்டார்.

அச்சமயத்தில் நானாவின் மனஓட்டத்தை அறிந்த பாபாஜி உடனடியாக அவரை அழைத்துக் கொண்டு கன்ஹான் நதியின் கரைக்குச் சென்றார். அங்கு பாபாவின் கருணையால், நானா பஞ்சமரி என்ற திருத்தலத்தின் முழுமையான தரிசனத்தை கண்டு மகிழ்ந்தார்.

ஒருநாள் பாபா நானாஜியின் இல்லத்திற்குள் நுழைந்தார், அங்கே ஒரு கட்டிலில் அவருடைய மகன் மகாதேவன் உடல்நிலை சரியில்லாமல் படுத்துக் கொண்டிருப்பதை கண்டார். அவர் நானா, மகாதேவனுக்கு என்ன ஆயிற்று? ஏன் இவ்வாறு படுத்துக் கொண்டிருக்கிறான்? என்று கேட்டார்.

நானாஜி பணிவுடன், மகாதேவனுக்கு மிக அதிகமான அளவு காய்ச்சல் ஏற்பட்டு இருப்பதாகவும், அதன் வீரியத்தை தாங்க முடியாமல் மகாதேவன் அவஸ்தைப்பட்டுக்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொண்டிருக்கிறான் என்றும் கூறினார். பாபா மகாதேவனின் தாயாரிடம் எரிப்பதற்காக, சில குச்சிகளைக் கேட்டார். ஒரு சிறிய அளவில் யாகம் நடத்துவதைப் போன்று பாபா அக்னியை உருவாக்கினார்.

அந்த அக்னியை எடுத்துச் சென்று மகாதேவனின் கட்டிலுக்கடியில் வைத்து, ஒரு போர்வையை தனது கைகளால் மகாதேவனுக்கு போர்த்தினார். அவருடைய அற்புதம் அடுத்த சில வினாடிகளில் துவங்கிவிட்டது. போர்வையை விலக்கி விட்டு மகாதேவன் பூரண நலமுடன் எழுந்து உட்கார்ந்து விட்டான். இப்போது அவனுக்கு காய்ச்சல் இல்லை! இது போன்ற அற்புதங்கள், நானாஜியின் குடும்பத்திலும் நிறைய நடந்துள்ளன.

நானாஜி என்ற திரு. காசிநாத் பாட்டில் மிகப்பெரிய நிலச்சுவான்தாராக இருந்தார் என்பதை கண்டோம். ஆனாலும், ஓரிரு வருடங்கள் பருவமழை பெய்யாததால் அவர் வயலில் விளைச்சல் மிகவும் குறைந்து விட்டது. இருப்பினும் அவரை நம்பியிருந்த பணியாளர்களுக்கு அவர் ஒரு குறையும் வைக்கவில்லை. ஆனால் அவர் வங்கியில் வாங்கியிருந்த விவசாய கடன் தொகை, வட்டியோடு சேர்த்து பலமடங்கு பெருகிவிட்டது.

ஒரு மிகப்பெரிய தொகையை வங்கியில் செலுத்த வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. அவரிடம் தற்சமயம் அவ்வளவு பெரிய தொகை இல்லை. என்ன செய்வது? என்று புரியாமல் அமர்ந்திருந்தார்.

ஒருவேளை வங்கியில் குறிப்பிட்ட தேதிக்குள் பணத்தைச் செலுத்தாத நிலையில், விசாரணைக்கு ஆளாக நேரிடும் என்பதையும் உணர்ந்திருந்தார். அரசாங்கம் குறிப்பிட்ட காலக்கெடு முடியும் தருவாயில் அதிகாரிகள் நானாஜியின் இல்லத்தைச் சூழ்ந்து கொண்டனர்! நானாஜி, அதிகாரிகளிடம் வாங்கிய கடனுக்காக, தனது சொத்துக்களை ஜப்தி செய்து கொள்ளுமாறும், அதற்கு முன்னால் பூஜை செய்வதற்காக சிறிது நேரம் தமக்கு அவகாசம் வேண்டுமென்று கேட்டார்!

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நானாஜியின் வார்த்தைக்கு மதிப்பளித்த அதிகாரிகள் அவர் பூஜை முடித்து வரும் வரை வாசலில் காத்துக் கொண்டிருந்தனர். நானாஜி தமது பூஜை அறையில் இறைவனிடம் மனதார பிரார்த்தனை செய்தார். நானாஜி தமது சொத்துக்களை இழப்பது பற்றி கவலை கொள்ளவில்லை. ஆனால் தனது குடும்பத்திற்கு இருக்கும் செல்வாக்கு, மதிப்பு இவை யாவும் இழந்து விடக்கூடாது என்று அஞ்சினார்.

நானாஜி பூஜை செய்து கொண்டிருக்கும் பொழுது திடீரென்று, பாபா தான் அமர்ந்திருக்கும் புளிய மரத்தடியிலிருந்து புறப்பட்டு, நானாஜியின் இல்லத்திற்கு வந்தார். அங்கு அதிகாரிகள் நின்று கொண்டிருப்பதைக் கண்டார். அவர் நானாவிடம் இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது. ஏன்? அதிகாரிகள் வீட்டு வாயிலில் நின்று கொண்டிருக்கின்றனர் என்று அன்புடன் கேட்டார்.

நானாஜியின் மூலம் நடந்தவற்றை பாபாஜி அறிந்து கொண்டார், பாபாஜி! நானாவின் மனைவியிடம் ஒரு பெரிய பானையை கொண்டு வருமாறு கூறினார். பானை வந்ததும், அதனுள் அரிசியும் நீரும் சிறிதளவு விட்டு அப்பானையை கவிழ்த்து வைத்தார். அதன் பின்னர் பாபாஜி நிகழ்த்திய அற்புதத்தை எடுத்துக்கூற வார்த்தைகளே இல்லை. பாபாஜி, தொடர்ந்து அந்தப் பானையிலிருந்து ஏழு பானைகளை வெளியே எடுத்தார். என்ன அற்புதம்! அந்த ஏழு பானைகள் முழுவதும் தங்கத்தால் உருவாக்கப் பட்டிருந்தன. அவையாவும் பிரகாசமாக ஜொலித்தன.

இப்பொழுது பாபாஜி, வாயிலில் நின்று கொண்டிருந்த அதிகாரிகள் மற்றும் அவருடன் நானாவின் சொத்துக்களை பறிமுதல் செய்ய வந்தவர்களை அழைத்தார்! பாபாஜி அவர்களிடம் "கடன் தொகையை ஈடு செய்யும் அளவிற்கு இந்த பானைகளை எடுத்துக் கொள்ளுங்கள்." என்றார். பாபா நிகழ்த்திய மிகப்பெரிய அற்புதம்! என்னவென்றால், நானாவின் கடன் தொகை ஈடுசெய்ய முடியாத அளவிற்கு மிகப்பெரிய தொகையாக இருந்தது.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஆனால் பாபாஜி உருவாக்கிய ஏழு பானைகளில் இரண்டு பானைகள் மட்டுமே அவரது கடனுக்கு ஈடாக எடுத்துக் கொள்ளப்பட்டது. நானாஜி தமது குடும்பத்தை இக்கட்டான நிலையிலிருந்து காத்து இரட்சித்த பாபாவை! தமது குலதெய்வமாகவே கருதி போற்றி வந்தார். மீதமிருந்த ஐந்து பானைகளை என்ன செய்வது என்பதை பாபாவே தீர்மானிக்கட்டும்! என்று நானாஜி அமைதியாக இருந்தார்.

பாபா, நானாவிடம் நீயே எடுத்துக் கொள்வாய்! என்றார். ஆனால் நானாஜி அவற்றை மறுத்தார், இரண்டு முறை பாபா கூறியும், நானாஜி தனது கைகளால் கூட அவற்றை தொடவில்லை. நானாஜி பாபாவிடம், "பிரபு இத்தங்கத்தை உருவாக்குபவரே என்னிடம் இருக்கும்போது, இதை வைத்துக் கொண்டு நான் என்ன செய்யப்போகிறேன்! இவை எனக்கு வேண்டாம்! தாம் ஒருவரே எனக்குப் போதும்!" என்றார்.

பாபா சிரித்துக்கொண்டே அவை அனைத்தைம் மறையச் செய்தார். அவர் நானாஜியிடம்! உனது குடும்பத்தினருக்கு வருங்காலத்தில் ஏதாவது ஒரு சூழ்நிலையில் வறுமை நேர்ந்தால், மறைந்த இத்தங்கப் பானைகள் அனைத்தும் தாமாகவே உன்னைத் தேடி வரும்! என்று ஆசீர்வதித்தார். ஒருமுறை நானாஜியின் மற்றொரு புதல்வன் சீதாராம் பாட்டில், பாபாவிடம்! பிரபு ஏகாதசி என்ற புண்ணிய தினத்தில், நான் பண்டரிபுரம் சென்று பாண்டுரங்கனை தரிசிக்க விரும்புகிறேன்!

அதற்கு தான் அனுமதி அளிக்க வேண்டுகிறேன் என்றார். ஆனால் பாபா எதுவும் கூறவில்லை. பாபாவிடம் உத்தரவு பெறாமலேயே, சீதாராம் பண்டரிபுரம் சென்று விட்டார். அங்கு பாண்டுரங்கனை தரிசித்தார். அதன் பின்னர், பாண்டுரங்கனுக்கு அருகில் அமைந்திருக்கும் ஸ்ரீ கருடரின் மணிமண்டபத்தில், கருடரின் திருவுருவத்தை சீதாராம் அணைத்துக் கொள்வதற்காக அருகில் சென்றவர், என்ன ஆச்சரியம்! தாஜுதீன் பாபா அங்கு நின்று கொண்டிருந்ததைக் கண்டார்.

சீதாராமுக்கு தனது கண்களையே நம்ப இயலாத நிலையில், மீண்டும் மீண்டும் உற்றுப் பார்த்தார். தாஜுதீன்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பாபா தன்னுடைய உருவத்தில் கம்பீரமாக அங்கே காட்சியளித்ததைப் பார்த்த சீதாராம் அத்திருவுருவத்தை இறுக அணைத்துக் கொண்டு,

"பாபாவே என்னுடைய விட்டல்,
விட்டலே என்னுடைய பாபா"

என்றார். தான் அனுமதி பெறாமல் வந்தபோதும் தனக்கு ஆசீர்வாதம் செய்ததற்காக பாபாவிடம் நன்றியைத் தெரிவித்தார். இதுபோன்று பல அற்புதங்களை தாஜுத்தீன் பாபா இன்றளவும் உலகம் முழுவதும் நிகழ்த்தி கொண்டிருக்கிறார்.

பாபா அவர்களால் நானா என்று அழைக்கப்பட்ட காசிநாத் பாட்டில், இதுவரை தாம் அனுபவித்து வந்த குடும்ப வாழ்க்கை, மனைவி, குழந்தைகள், உறவினர்கள் மற்றும் பணியாளர்கள், வயல், மனை முதலிய சொத்துக்கள் இவை எல்லாவற்றிலும் விடுதலையடைய தீர்மானித்தார். அவர் தாஜுத்தீன் பாபாவுடன் கொண்டிருந்த தெய்வீக உறவில் மட்டுமே தீவிரமாக இருக்க விரும்பினார்.

ஆகையால், குடும்ப வாழ்க்கையில் இருந்து முக்தி பெறுவதற்காக ஒரு தீர்மானத்தை மேற்கொண்டார். தன்னுடைய ஏழு குழந்தைகளையும் அழைத்து, தமக்கு முன்னால் அமரும்படி கூறினார். அவற்றில் இரண்டு பெண் குழந்தைகள். தன்னுடைய சொத்துக்கள் முழுவதையும் ஏழு குழந்தைகளுக்கும் சரிசமமாக பகிர்ந்து அளிக்க முடிவு செய்தார்.

அச்சமயத்தில் தாஜுத்தீன் பாபா திடீரென அவ்விடத்திற்கு வருகை தந்தார். அவர் நானாவிடம் ஏழு குழந்தைகளுக்கும் சொத்துக்களைப் பாகப்பிரிவினை செய்து விட்டாய்! இதில் என்னுடைய பாகம் எங்கே? என்று கேட்டார். அதைக் கேட்டு மகிழ்ந்த நானாஜி, ப்ரபு! இவை எல்லாம் தங்களுடையதாக இருக்கும்போது, நான் தங்களுடைய பாகத்தை எவ்வாறு தனியாக பிரிக்க இயலும்? என்றார்.

பாபாஜி எனக்கு வேண்டியது வெறும் நான்கு ஏக்கர் மட்டும் ஆகும் என்றார். அதைக் கேட்ட நானாஜி எங்குள்ள நான்கு ஏக்கர் நிலம் என்று கூறினால், நான் சௌபாக்கியம்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

செய்தவனாவேன்! என்றார். பாபாஜி கற்கள் நிறைந்திருக்கும் ஒரு பகுதியைக் காண்பித்து அதுவே எனக்கு போதும்! என்றார்.

பாபாஜியின் உத்தரவை ஏற்ற நானாஜி, அந்த நான்கு ஏக்கர் நிலத்தையும், பாபாவினுடைய பெயரில் பதிவு செய்து அளித்துவிட்டார். இன்றளவும் அப்பத்திரம் பாபாவின் பெயரில் உள்ளது. இதில் ஒரு அற்புதம் என்னவென்றால் வெறும் கற்கள் மட்டுமே நிறைந்த அந்த நிலம், அதன் பின்னர் செழுமையான நிலமாக ஆகிவிட்டது.

இன்றளவும் அந்நிலத்தில் பயிர் விளைந்து கொண்டிருக்கிறது என்ற விவரத்தை நானாஜியின் நான்காவது தலைமுறையினர் தெரிவித்துள்ளனர். இந்த நிகழ்வுக்குப் பின்னர் நானாஜி தன்னை முழுவதுமாக பாபாவிடம் அர்ப்பணித்து விட்டார். பாபாவிற்கு சேவை செய்வதை மட்டுமே தமது வாழ்நாளின் இலட்சியமாகக் கொண்டிருந்தார்.

நானாஜி ஒரு சிவபக்தர் என்ற காரணத்தால், பாபாஜி அவருக்கு சர்வேஸ்வரராக க் காட்சி அளித்தது மட்டுமல்லாமல், நானா விரும்பியவாறே, ஒரு மகாசிவராத்திரி தினத்தில் அவருக்கு முக்தியையும் அளித்தார். பாபாஜி நானாஜியின் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டார்.

நானாஜி அவர்களின் உடலை இந்துக்களுடைய சம்ப்ரதாயப்படி எரிப்பதற்கு பாபா அனுமதி அளித்தார். நானாஜியின் நினைவுச் சின்னம் பாபாவின் தவாகானா (Dawakhana) என்ற இடத்தின் அருகில் திரிசூலத்துடன் வைக்கப்பட்டுள்ளது. இந்த அனுக்ரஹம் இன்றளவும் அவரது பரம்பரையினருக்கும் கிடைத்து வருகின்றது. பாபாஜி வாக்கி நகரில் வசித்தபோது மரணித்த பல உயிர்களை உயிரோடு எழுப்பியுள்ளார். இத்தகைய அற்புதங்கள் மாபெரும் ஞானியர்களால் மட்டுமே புரிய இயலும்.

ஜெய் பாபா தாஜ்!

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## ஷரத் பூர்ணிமா அன்று தாஜுதீன் பாபா நிகழ்த்திய அற்புதம் :

வடஇந்தியாவில் ஷரத் பூர்ணிமா அல்லது கோஜாகிரி பூர்ணிமா மிகவும் விசேஷமாக அனைவராலும் கொண்டாடப்படும் திருநாள் ஆகும். அப்புனித நாள், அறுவடைத் திருநாள் எனவும் சந்திரனையும், மகாலக்ஷ்மியையும் வழிபடும் நாளாகவும் கருதப்படுகிறது. கோஜாகர்தி என்பதன் பொருள் "எவர் விழித்திருக்கின்றனர்!" என்பதாகும்.

அதாவது செல்வத்தின் அதிபதியான மகாலக்ஷ்மி அப்புனித நாளில் இரவு நேரத்தில், அனைவரிடமும் "இன்று என் தரிசனம் பெறுவதற்காக எவர் கண்விழித்து என்னை நினைக்கின்றார்களோ, நான் அவருக்கு சகல வளங்களையும் தருவேன்! என்று கூறுவதாக ஒரு ஐதீகம் உள்ளது. ஷரத் பூர்ணிமா என்ற சொல்லின் அர்த்தம், அன்றைய தினம், முழு நிலவு, பூமியின் மிக அருகில் வரக்கூடிய திருநாளாக அனைவரும் கருதுகின்றனர்.

அச்சமயத்தில் இரவு நேரத்தில், ஆகாயத்தை நோக்கி, திறந்த வெளியில், அனைவரும் பாலைக் காய்ச்சி வணங்குவார்கள். அப்போது பூமிக்கு மிக அருகில் வரும் சந்திரனின் அமிர்தம், அப்பாலில் இறங்கி விடும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். அத்திருநாள் தமிழில் புரட்டாசி மாதத்தின் இறுதியில் வரக்கூடிய புண்ணிய தினமாகும்.

ஒவ்வொரு வருடமும் நானாஜி கிராமவாசிகளுடன், அத்தினத்தில் கன்ஹான் நதிக்கரைக்குச் சென்று பாலைக் காய்ச்சி வணங்கி வருவது வழக்கம். அன்று ஷரத் பூர்ணிமா தினத்தில் இறைத் தூதரான பாபாவும், நானாஜியுடன் நதிக்கரைக்கு வந்தார்.

கிராமவாசிகளிடம் பாலைக் காய்ச்சுவதற்கு உண்டான ஏற்பாடுகளை செய்யக் கூறினார். கிராமவாசிகளும் அதற்கான ஏற்பாடுகளை செய்து முடித்தனர். அன்றிரவு 12 மணிவரை திறந்த வெளியில் அமர்ந்திருக்க வேண்டும்! அதன் பின்னர் சந்திரனை வணங்கி, அப்பாலை அனைவருக்கும்

NOT FOR SALE

பகிர்ந்தளிப்பார்கள்.

நானாஜி இரவுப் பொழுதில் ஒருவேளை கிராமவாசிகள் உறங்கிவிட்டால் என்ன செய்வது என்று கருதி அனைவரையும் பஜனை செய்யக் கூறினார். கிராமவாசிகள் அனைவரும் பஜனை செய்ய ஆரம்பித்தனர். நடுநிசி துவங்கியது, திடீரென்று பாபா எழுந்து அங்குமிங்கும் ஓட ஆரம்பித்தார். அவர் நானாவிடம் இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது? என்று கேட்டார்.

நானாஜி, பணிவோடு அத்திருநாளின் மகத்துவத்தைப் பற்றி எடுத்துரைத்தார். தாஜுத்தீன் பாபா சிரித்துக் கொண்டே, ஏன் சந்திரனின் அமிர்தத்திற்காக ஏங்குகிறாய்? நான் அந்த சந்திரனையே இரண்டு துண்டுகளாக்கி, தங்கள் பாத்திரத்தில் விழ வைக்கிறேன்! என்றார்.

மகான்களின் வாக்கு தெய்வ வாக்காகும். அது ஒருநாளும் பொய்க்காது. அடுத்த சில விநாடிகளில், பாபா நிகழ்த்திய அற்புதத்தை, கிராமவாசிகள் நேரில் சாட்சியாக நின்று கண்டு தரிசித்தனர்.

ஆகாயத்தை நோக்கிய, பாபாஜி தமது இரு கைகளையும் ஏதோ ஒரு பொருளை இரண்டாக உடைப்பதை போன்று, இருபுறங்களிலும் இழுத்து பிடித்தார். அவ்வளவுதான் அடுத்த விநாடி, ஆகாயத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்த அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். காரணம், முழுமையாக ஒளிர்ந்த பௌர்ணமி நிலவு, இரண்டு துண்டுகளாகக் காட்சியளித்தது.

அக்காட்சியைப் பார்த்த மக்கள், இவர் நம்மை காக்க வந்த அவுலியா என்று கருதி ஜெய் பாபா தாஜ்! என்று ஆரவாரித்தனர். தாஜுத்தீன் பாபாஜியின் ஆற்றல், இவ்வுலகில் மட்டுமல்ல, ஏழு உலகங்களிலும் உண்டு என்பதை பாபாவே அனைவருக்கும் அறிவித்துள்ளார்.

*ஜெய் பாபா தாஜ்!*

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

**ஷேருவின் (நாய்) சேவையும், அதற்கு உயிர் கொடுத்த பாபாவின் அற்புதமும் :**

தாஜுத்தீன் பாபா தமக்கு பல காலம் சேவை செய்த ஷேரு என்ற பிரியமான ஒரு நாயிடம் நிகழ்த்திய அற்புதத்தை நாம் இப்போது காண்போம்!

ஷேரு என்ற அந்த நாய், மனிதர்களைக் காட்டிலும் பல மடங்கு பாபாவிற்கு சேவை செய்து வந்தது. தினமும் அந்த நாய் இரயில் நிலையத்திற்குச் சென்று, இரயில் வரும் சரியான நேரத்தில் காத்திருந்து, பாபாவை தரிசிக்க வரும் பக்தர்களை, அவர் இருக்கும் இடத்திற்கு வழி காட்டியவாறு அழைத்துச் செல்லும். இரயில் தாமதமாக வரும்போதும், அந்த நேரத்திற்கு ஷேரு சரியாகச் செல்வது ஆச்சரியமான ஒன்று.

இரயில் நிலையம் மட்டுமல்லாது நடைப் பயணமாகவும், இதர வாகனங்களில் வருபவர்களையும் பாபாஜி இருக்கும் இடத்திற்கு எந்தவித பிரதிபலனையும் எதிர்பாராது ஷேரு அழைத்து வருவது வழக்கம். பாபாஜியின் தரிசனத்தை பெற வரும் பக்தர்களுக்கு, ஷேரு சேவை செய்வது ஒன்றையே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தது. அவ்வாறு பக்தர்களை அழைத்துச் செல்கையில், பாபாஜி அச்சமயத்தில், எந்த இடத்தில் இருப்பார் என்று யூகித்து அந்த இடத்திற்கு அவர்களை அழைத்துச் செல்லும்.

அதனால், வெகுதொலைவிலிருந்து வரும் பக்தர்கள், பாபாவை தரிசிக்காமல், ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதை உயர்ந்த குணமுடைய ஷேரு (நாய்) விரும்பவில்லை. வழிகாட்டியாக சேவை செய்யும் மனிதர்கள்கூட பல சமயங்களில், தனது சேவைக்காக, பக்தர்களிடம் கை நீட்டி யாசகம் கேட்பார்கள்! ஆனால் ஷேரு, அவர்கள் தரும் ரொட்டித் துண்டைக்கூட தொடாமல் கண்ணியம் காத்தது.

நாளடைவில், ஷேருவின் புகழ் அவ்வூர் முழுவதும் பரவியது. ஒருநாள் பாபாஜியை தரிசிக்க வந்த பக்தர் ஒருவர், இரயில் நிலையத்தில் இறங்கியவுடன், ஷேருவை தேடினார். ஆனால் அவர் கண்களுக்கு ஷேரு தென்படவில்லை. அவரைப்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

போலவே மேலும் சில பக்தர்கள், ஷேருவைத் தேடிக் கொண்டிருப்பதை அவர் கண்டார். அவர்களோடு சேர்ந்து, பாபாஜியை தரிசிக்க, அவரும் புறப்பட்டார்.

அவர்கள் வழிநெடுக இரயில் நிலையத்திற்கு, ஷேரு வராததைப் பற்றி தமக்குள் பேசிக்கொண்டே சென்றனர். அவர்கள் தாஜுதீன் பாபாவின் இருப்பிடத்தை அடைந்ததும், அங்கு பாபாஜி இல்லாததைக் கண்டு ஏமாற்றமடைந்தனர். வெகுதொலைவு பிரயாணம் செய்து வந்த அவர்கள், களைப்போடு இருந்ததால், பாபாவைத் தேடி வேறு எங்கு செல்வது என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுதுதான் அவர்கள் ஷேரு என்ற நாயின் மகத்துவத்தை உணர்ந்து கொண்டார்கள். வேறு வழியின்றி, பாபாஜியைத் தேடி அருகிலிருந்த காட்டு பிரதேசத்திற்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் கண்ட காட்சியால் அதிர்ச்சியடைந்தனர். அக்காட்டிற்குள் பாபாவிற்கும், அவருடைய அடியவர்களுக்கும், பல காலம் சேவை செய்து வந்த ஷேரு என்ற உயர்குணமுள்ள அந்த நாய், மூன்று நாட்களுக்கு முன்னரே இறந்து விட்டதை அறிந்தனர்.

அதன்பிறகு அவர்கள் அவ்விடத்தை கடந்து செல்லாமல் மாற்று பாதையில் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த பாபா அதற்கான காரணத்தை கேட்டார். அவர்கள் ஷேரு இறந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டதால், அதன் உடல் முழுவதும் அழுகி துர்நாற்றம் வீசுவதால், அவ்வழியாக செல்ல இயலவில்லை என்று கூறினர.

இதைக்கேட்ட பாபா அவ்விடத்திற்கு விரைந்து வந்தார். அங்கு இறந்த ஷேருவின் மேல் தமது பாதங்களை வைத்தார். அடுத்த விநாடி என்ன அற்புதம்! ஷேரு துள்ளிக் குதித்து எழுந்து நின்றது. தமது உயிரைக் காப்பாற்றிய பாபாவின் அருகில் சென்று பாசத்தைப் பொழிந்தது. ஷேரு உயிரோடு எழுந்தவுடன் அதற்குப் பிறகு மூன்று வருடங்கள் பாபாவிற்கு சேவை செய்து வாழ்ந்தது. அவ்விடத்தில் ஷேருவிற்கு ஒரு சமாதியும் அமைக்கப்பட்டது. அவ்விடம் ஷேரு பாபா தர்பார் என்று அழைக்கப்படுகிறது.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இன்றளவும் தாஜுத்தீன் பாபாஜி ஷேருவை, உயிர்ப் பெற செய்த அந்த இடம் புனிதமான இடமாக கருதப்பட்டு, அனைவராலும் வணங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், எவரேனும் நாய் கடியினால், அவஸ்தைப் பட்டால், அவ்விடத்தில் வந்து பிரார்த்தனைச் செய்தால், உடனடியாக குணமாவதை பலரும் நேரில் கண்டு வியந்துள்ளனர்!.

*ஜெய் பாபா தாஜ்!*

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## கிரிஜாபாயிடம் பாபா நிகழ்த்திய அற்புதம்

எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும், பாகுபாடின்றி தாஜுதீன் பாபாவிடம் தமது குறைகளைக் கூறியும், அவற்றை நிவர்த்தி செய்து கொண்டும் சென்றனர். மகான்களை மதம் என்ற வலையில் எவராலும் சிக்க வைக்க முடியாது.

கிரிஜாபாய் இறைவனை குறித்து பஜனை பாடல்களை பாடுபவர். ஒருநாள் நானாஜி, தமது பணியாட்களை, பாபாவிற்கு சேவை செய்யுமாறு அனுப்பி வைத்தார்.

அங்கே அவர்கள் கண்ட காட்சி அதிர்ச்சியை அளித்தது. அக்கூடாரத்தில் கிரிஜாபாயின் இறந்த சடலம் மட்டுமே இருந்தது. நானாஜியின் பணியாட்கள் இச்செய்தியை உடனடியாக அவரிடம் தெரிவித்தனர். அவ்விடத்திற்கு விரைந்து வந்த நானாஜி, அக்கூடாரத்தில் இறந்து கிடந்த, அவரது உடலை எவ்வாறு நல்லடக்கம் செய்வது என்று யோசித்தார். பாபா தனது அடியவர் ஒருவரிடம், ஒரு கோப்பை தேநீர் தயாரித்து அதை கிரிஜாபாயிக்கு வழங்குமாறு உத்தரவிட்டார்.

பாபாவின் சார்பாக தேநீரைக் கொண்டு வந்தவரும், நானாஜியின் சார்பாக தகவல் கொண்டு வந்தவரும் வழியில் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டனர். நானாஜியின் சார்பாக வந்தவர் பாபாவின் அடியவரிடம், தாங்கள் சிரமப்பட்டு தேநீரை எடுத்துக் கொண்டு கிரிஜாபாயின் கூடாரத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை! அவள் இறந்து பல மணி நேரங்கள் ஆகிவிட்டன என்றார்.

இச்செய்தியை, பாபாவிடம் தெரிவிப்பதற்காகவே, நாங்கள் சென்று கொண்டிருக்கிறோம்! என்று கூறினார்கள். ஆனால், அந்த அடியவர், தாஜுதீன் பாபாவின் மேல், அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்ததால், பணியாட்கள் கூறியதை ஏற்க மறுத்தார். அவர், என்னுடைய குருவான பாபாவின் உத்தரவை ஏற்று கிரிஜாபாய் என்ற அம்மையாருக்கு தேநீர் எடுத்துக் கொண்டு போகிறேன். எந்த சூழ்நிலையிலும் நான் அதை மீறமாட்டேன்! இவ்வாறு கூறிவிட்டு அந்த அம்மையாரின் கூடாரத்திற்குச் சென்றார்.

NOT FOR SALE

அவர் கூடாரத்தை அடைந்ததும், அங்கே கிரிஜாபாய் அவர்களின் சடலத்தைக் கண்டார். அச்சடலத்திற்கு அருகில், நான்கு பெண்கள் அழுதுகொண்டிருந்தார்கள். ஆனாலும் அவர் தன் குருவின் வார்த்தையின் மீது, கொண்ட நம்பிக்கையை இழக்கவில்லை. அவர் மெதுவாக, அச்சடலத்திற்கு அருகில் சென்று கிரிஜா பாய் அம்மையாரின் பெயரைச் சொல்லி மூன்று முறை அழைத்தார். கிரிஜாபாய் அவர்களே! நம் குருநாதர் ஹஸ்ரத் தாஜுத்தீன் பாபா அவர்கள் தமக்காக அன்புடன் தேநீர் அனுப்பியுள்ளார்!

ஆகையால், இத்தேநீரைப் பருகுங்கள்! என்று கூறி அந்த அம்மையாரின், சடலத்தின் வாயைத் திறந்து, தாம் கொண்டு வந்த தேநீரை, அவரது வாயில் ஊற்ற ஆரம்பித்தார். என்ன அற்புதம் ஆனால் இறந்து பலமணி நேரமாகியிருந்த, கிரிஜாபாயின் சடலம், பாபாவின் பிரசாதத்தை ஏற்றுக்கொண்டது. அடுத்த சில விநாடிகளில், கிரிஜாபாய் எழுந்து உட்கார்ந்தார்.

அவர் அங்குள்ள அனைவரிடமும், தமது தெய்வமான தாஜுத்தீன் பாபா எங்கு உள்ளார்! என்று விசாரித்தார். பாபா கூடாரத்தில், இல்லை என்ற தகவல் அறிந்ததும், விரைந்து தனது கூடாரத்தை விட்டு வெளியே வந்தார். அங்கு தாஜுத்தீன் பாபா, தனது அருகில் நின்று கொண்டிருப்பதைக் கண்டார். பாபா அந்த அம்மையாரிடம், தினமும் நீ பாடும் பஜனைப் பாடல்கள் என்னை மிகவும் கவர்ந்தன! இப்பொழுது ஒரு பாடலை பாடுவாயாக! என்று உத்தரவிட்டார். கிரிஜாபாய் இதைக் கேட்டு மகிழ்ந்து, தாஜுத்தீன் பாபாவிற்காக பஜனைப் பாடல்களைப் பாடினார்.

அங்கு நடந்த அனைத்து நிகழ்வுகளையும் கவனித்துக் கொண்டிருந்தவர்கள் பாபாவின் அளவற்ற ஆற்றலைக் கண்டு வியந்து போற்றினார்கள். இறந்து பல மணிநேரமான அந்த அம்மையாரை, பாபா உயிருடன் எழுப்பிய செய்தி, அப்பிரதேசம் முழுவதும் காட்டுத்தீயாக பரவியது. இந்த அற்புத நிகழ்விற்கு பின்னர் கிரிஜாபாய் நீண்ட காலம் வாழ்ந்து, பாபாஜி அவர்களுக்கு சேவை செய்து வந்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

**குழந்தை வரம் அளித்த அற்புதம் :**

பாபாஜி, தனது கருணையால் குழந்தைபேறு இல்லாத வர்களுக்கு ஆசி வழங்கினார். அவரை தரிசிக்க வந்த பெண்களின் கருப்பையில், குழந்தை உருவாக, எவ்வித வாய்ப்பும் இல்லை என்று மருத்துவர்களால் கைவிடப்பட்ட வர்களும், தாஜுத்தீன் பாபாவின் கருணையாலும் ஆசிர்வாதத்தால் ஆரோக்கியமான குழந்தைகளை பெற்றெடுத்தனர்.

இதைக் கேள்வியுற்ற சாந்தாபாய் மற்றும் அவளுடைய தோழி சுபத்ராபாய் ஆகிய இருவரும் அமராவதி மாவட்டத்திலிருந்து பாபாஜியை தரிசிப்பதற்காக வாக்கி (WAKI) என்ற இடத்தை அடைந்தனர். அவர்கள் வருகை புரிந்த சமயத்தில், பாபாஜி அங்குள்ள கன்ஹான் நதிக்கரையில் அமர்ந்து கொண்டிருந்தார்.

அவரைத் தேடி நதிக்கரைக்கு வந்த அவ்விரு பெண்மணிகளும் கிட்டத்தட்ட 12 ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லாமல் ஏங்கிக் கொண்டிருந்தனர். மலடி என்று தம்மை, ஊரார் அனைவரும் தூற்றியதால், மனம் வேதனையுற்று, எவ்வாறாவது பாபாவை தரிசித்து, அவருடைய ஆசிர்வாதம் பெற்றால், அவர் நமக்கு நிச்சயமாக, தாய்மை அடையும் சிறந்த வரத்தை அருளுவார் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர்.

அவ்விருவரும், நதிக்கரையில் அமர்ந்திருந்த பாபாவை வணங்கி தமது மனக் குறையை தெரிவித்து அழுதனர். கருணைக் கடலான, தாஜுத்தீன் பாபா தமது மேலங்கியில் இருந்த பையிலிருந்து இரண்டு லட்டுகளை, அவ்விருவருக்கும் பிரசாதமாக அளித்துவிட்டு, மௌனமாக இருந்தார். அவரிடமிருந்து பிரசாதத்தைப் பெற்ற அப்பெண்மணிகளின் செயல்பாட்டை நாம் இப்போது காண்போம்!

அவர்களில் சாந்தாபாய் என்ற பெண்மணி, பாபாவின் பிரசாதம், தமக்கு நிச்சயமாக குழந்தையைப் பெறுவதற்கு, துணை செய்யும் என்று நம்பிக்கையுடன், அந்த லட்டுவை ஆராயாமல், அப்படியே தனது வாயில் போட்டுக் கொண்டு,

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பாபாவிடம் மனதார வேண்டினார். அவளுடைய தோழியான சுபத்ராபாய், அந்த லட்டு எப்போது தயாரிக்கப்பட்டது? ஒரு வேளை நீண்ட நாட்களாகி இருந்ததால், அதனால் உடல் நலத்திற்கு கேடு விளையுமோ! இவ்வாறெல்லாம் சந்தேகம் ஏற்பட்டவுடன் அதை உண்பதற்கு அவளுக்கு மனம் வரவில்லை.

அவருடைய கர்ம பலனை அடைய இயலாமல், மாயை என்ற திரையால் அவள் மறைக்கப்பட்டாள் என்றே சொல்ல வேண்டும்! ஆனால் அந்த லட்டுவை தாம் உண்ணவில்லை என்பதை பிறர் அறியக்கூடாது என்று, அவள் நினைத்தாள். ஆகையால் தந்திரமாக நதிக்கரையில் இருந்த மணலில் புதைத்துவிட்டாள். இச்செயலை அவளுடன் வந்த மற்றொரு பெண் அறியவில்லை. ஆனால் இறைவனின் தூதரான பாபாவிடம், எதை மறைக்க இயலும்?

அவ்விருவரும் தங்களின் வசிப்பிடமான அமராவதிக்குச் சென்று விட்டனர். பாபாவின் பிரசாதத்தை நம்பிக்கையுடன் உண்ட சாந்தாபாய் கருவுற்றாள். அடுத்த வருடத்தில் அவள் ஒரு அழகிய, ஆரோக்கியமான ஆண் குழந்தையை பெற்றெடுத்தாள். ஆனால் அவளுடடைய தோழி சுபத்ராபாய்க்கு அந்த பாக்கியம் கிடைக்கவில்லை.

குழந்தையை பெற்ற சாந்தாபாய், பாபாவிற்கு நன்றி தெரிவிப்பதற்காக புறப்பட்டாள். அவளுடன், அவளுடைய தோழி சுபத்ராபாயும் பாபா தரிசிக்க சென்றாள். சுபத்ராபாய் பாபாவிடம் குழந்தை வரத்திற்காக மன்றாடி வேண்டி ஆசி பெற விரும்பினார். அவர்கள் இருவரும், பாபாவிடம் ஆசி பெற்றனர்.

சாந்தாபாய் தன் குழந்தையை பாபாவின் காலடியில் கிடத்தி, ஆசீர்வதிக்க வேண்டினாள். பாபா மகிழ்ச்சியுடன் ஆசீர்வதித்தார். இதைப் பார்த்த தோழி சுபத்ராபாய் பாபாவிடம், "பாபா நாங்கள் இருவரும் ஒன்றாகத்தானே தம்மிடம் ஆசி பெற வந்தோம்!

எனது தோழிக்கு மட்டும் தாம் ஆசிவழங்கிய காரணம் என்ன? எனது குழந்தை எங்கே?" என்று கேட்டாள். அவள் கூறியதைக் கேட்டு சிரித்த பாபாஜி "உனது குழந்தை நதிக்கரை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மணலில் உள்ளது! வேண்டுமானால் தோண்டிப் பார்த்து உன் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்!" என்றார். எங்கும் நிறைந்த பாபாவின், இத்தகைய சொற்களைக் கேட்டு, அப்பெண் அதிர்ச்சி அடைந்தார்.

பாபா நிச்சயமாக மிகப்பெரிய மகான்! நாம் சந்தேக புத்தியால் தவறிழைத்து விட்டோம்! என்பதை உணர்ந்து, தனது கன்னங்களில் ஓங்கி அறைந்து கொண்டு, பாபா தவறு இழைத்துவிட்டேன், மன்னித்து விடுங்கள்! கருணையோடு எனக்கு அருள் புரியுங்கள்! என்று பாபாவின் பாதங்களில் விழுந்து வணங்கினார்.

மகான்கள் தம்மை சோதித்துப் பார்க்க நினைத்தவர் களைக் கூட, மனம் திருந்துவதற்கு வாய்ப்பளித்து, மன்னிப்பும் வழங்குவார்கள். அப்போதும் மனம் திருந்தவில்லையென்றால், இறைவனாலும் அவரை காப்பாற்ற இயலாது!

சுபத்ராபாய்க்கு ஒரு வருடத்தில் குழந்தைபேறு கிடைத்தது. பாபாவின் புகழைக் கேள்வியுற்ற, அமராவதியில் வாழ்ந்த மக்கள் அனைவரும் அவரை தரிசிக்க வந்தனர்.

## வாக்கி என்ற இடத்தில் தரிசிக்க வேண்டிய புண்ணியத் தலங்கள்

தாஜுதீன் பாபா வாக்கி என்ற புனித இடத்தில், பல்வேறு பகுதிகளை முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக அனைவருக்கும் அடையாளம் காட்டியுள்ளார்.

## ஷிஃபாகானா / தவாகானா (Shifakhana) மருத்துவமனை :

பாபா குறிப்பிட்ட இப்பகுதி, வாக்கி தர்காவின் மேற்குப் பகுதியில் சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இவ்விடத்திற்கு வரும் நோயாளிகளை, பூரண குணமாகும் வரை அங்கேயே தங்குமாறு, பாபா அறிவுறுத்தியுள்ளார். ஆச்சர்யமாக, அப்பகுதிக்கு சென்று தங்கியிருந்த அனைவரும், தமது இல்லம் திரும்பும் நேரத்தில் நீண்டகாலமாக தம்மைப் பீடித்திருந்த வியாதிகளும், மன வியாதிகளும் நீங்கி, புத்துணர்ச்சி அடைந்தனர்.

இதுவும் பாபாவின் அற்புத லீலைகளில் ஒன்றாகும். இன்றளவும் அப்பகுதியில் சிறிது நேரம் அமர்ந்து தியானம்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

செய்பவர்கள், பாபாவின் கருணையால் பூரண குணமடைகின்றார்கள் என்று இப்பகுதி வாழ் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆகையால் தான் பாபா, இப்பகுதிக்கு மருத்துவமனை என்ற பொருளில் ஷிஃபாகானா என்று பெயரிட்டார்.

**வாக்கி தர்பார் (Wakki Darbar) :**

பாபாவின் உத்தரவிற்கு பணிந்து, ஏராளமானவர்கள் அவ்விடத்தில் சேவையில் ஈடுபட்டனர். அவ்வாறு சேவை செய்தவர்கள் பாபாவின் அருளை பலமடங்கு அதிகமாகப் பெற்று வாழ்வில சிறப்புற்று விளங்கினார்கள். எவர் வேண்டுமானாலும் சேவை புரிய வரலாம். குல வேறுபாடுகள், பாபாவின் தர்பாரில் நிராகரிக்கப்பட்ட ஒன்று. ஆனால் சேவை புரிய வரும் பக்தர்கள் அனைவருக்கும் முழுமையான நம்பிக்கை வேண்டும் என்பதை வலியுறுத்தினார். அவ்வாறு நம்பிக்கையுடன், சேவை செய்வதர்கள் வெகுவிரைவாக தங்களின் கோரிக்கைகள் நிறைவேறியதை உணர்ந்தனர்.

**மதரஸா (Madbarasba) கல்விக்கூடம் :**

தாஜுத்தீன் பாபா, தம்மிடம் ஞானம் வேண்டி வந்தவர்களை, அங்கிருந்த ஒரு மாமரத்தின் அடியில் அமரச் செய்தார். அவர் குறிப்பிட்ட அந்த பகுதியில் தியானப் பயிற்சியை மேற்கொண்ட அடியவர்களின் மனம் ஒருமுகப்பட்டு, இறைவனை அடைவது ஒன்றே தமது இலக்கு என்பதை அனைவரும் உணர்ந்து கொண்டனர். உலகப் புகழ்பெற்ற அச்சக்தி இன்றளவும் இத்தகைய மத ஒருமைப்பாட்டை, அனைவருக்கும் வழங்கிக் கொண்டிருக் கிறது.

ஹஸரத் தாஜுத்தீன் பாபா குறிப்பிட்ட அம்மகுதியில் தான் அகமத் நகரைச் சேர்ந்த பார்ஸி இனத்தைச் சேர்ந்த மாபெரும் ஞானியும், இறைவனின் தூதுவர் என்று அனைவராலும் போற்றப்படும் மெஹர் பாபாஜியை இவ்வுலகத்திற்கு அடையாளம் காட்டியது. ஷீரடி ஸ்ரீ சாய்பாபாவின் தீவிர பக்தரும், பிரதான சீடருமான

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

திரு உபாசினி பாபா என்ற மாபெரும் ஞானியும் அவ்விடத்தில் பிரார்த்தனை செய்தனர்.

**உயர் நீதிமன்றம் (High Court) :**

ஒருமுறை தூக்கு தண்டனை ஒரு கைதி, தண்டனையைப் பெறுவதற்கு முன்னால், கடைசி விருப்பமாக பாபாவை சந்திக்க வேண்டினார். காவலர்கள் அவரை பாபாவிடம் அழைத்து வந்தனர். அப்பொழுது பாபா, அந்த கைதியிடம் உன்னுடைய தண்டனையிலிருந்து நீ விடுவிக்கப்பட்டாய்! என்றார். இது பாபாவின் நீதிமன்ற உத்தரவு என்றார்!

எவர் ஒருவருக்கு நீதி கிடைக்க வேண்டும் அல்லது வழக்குகளில் வெற்றி கிடைக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் நீதிமன்றத்திற்கு சென்று உண்மையாக வேண்டினால் அவருக்கு நியாயம் நிச்சயமாகக் கிடைக்கும். ஆகையால் பாபாஜி அப்பகுதியை தக்க நியாயம் வழங்கும் நீதிமன்றம் என்று அனைவருக்கும் அறிவித்தார்.

NOT FOR SALE

**மீட்டா நீம் (Sweet Neem) சுவை மிகுந்த வேம்பின் இலை :**

வாக்கியின் தர்காவிற்கு தெற்குப்புறத்தில், ஒரு வேப்பமரம் உள்ளது. பாபா எப்போதும் அந்த வேப்ப மரத்தடியில் அமர்வதையே விரும்புவார். ஒருநாள் தாஜுதீன் பாபா, வேப்பமரத்தடியில் அமர்ந்திருந்த பொழுது, பல வியாதிகளால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவன், பாபாவை தரிசிக்க வந்தான். பாபா அவனிடம் அம்மரத்தின் இலைகளைப் பறித்துக் கொடுத்து, அவனை உண்ணுமாறு கூறினார்.

அவன் மனதில் வேப்ப மரத்தின் இலைகள் மிகவும் கசப்புத்தன்மை உடையதாக இருக்குமே! இதை எவ்வாறு உண்பது? என்று யோசித்துக் கொண்டிருந்தான். தாஜுதீன் பாபா அவன் மன ஓட்டத்தை புரிந்து கொண்டு, "நீ நினைப்பது தவறு! இந்த இலைகளைப் பார்க்கும் பொழுதே இனிப்புத் தன்மை உடையதாக எனக்குத் தெரிகின்றனது!"

அவ்வாறு இருக்கும் போது, அந்த இலைகளை சுவைத்தாலும் அதே இனிப்புத்தன்மையே காணப்படும்! நாம்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

எதை விரும்புகின்றோமோ, அதுவே நமக்கு கிடைக்கும்! சுவைத்துப்பார்! என்றார். பாபாவின் ஆணை, பிரம்மத்தின் ஆணை என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். ஆகையால், அவன் அந்த இலைகளை சுவைத்து பார்த்த பொழுது என்ன அற்புதம்! வேம்பின் இலைகள், தமது இயல்பு நிலையிலிருந்து மாற்றம் கொண்டு, மிகவும் இனிமையான சுவையுடன் காணப்பட்டது.

இக்காட்சியை விவரிக்க போதுமான வார்த்தைகள் என்னிடத்தில் இல்லை என்பதால், இத்தகைய அல்லாஹ்வின் தூதுவருக்கு, ஈசனின் அவதாரத்திற்கு எனது சிரம் தாழ்ந்த நமஸ்காரங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலைகளைச் சுவைத்த அவன் புதுப்பொலிவுடன் காணப்பட்டான்.

இதைக் கண்டு அதிசயித்த அவ்வூர் மக்கள் அம்மரத்தைத் தரிசிக்க வரத்தொடங்கினர். இன்றளவும் அம்மரத்தின் பாதி பகுதி இலைகள் இனிமையாகவும், மீதி பகுதி கசப்பாகவும் இருக்கும் அற்புதத்தை காணலாம். ஆதலால், மக்கள் இம்மரத்தடியில் அமர்ந்து, பாபாவைத் தொழுது மரத்தின் இலைகளை சுவைத்து இல்லம் திரும்புகின்றனர்.

இத்தகைய அற்புத இடங்களை, பாபா! மக்கள் அனைவருக்கும் அடையாளம் காண்பித்து, அவர்தம் குறைகளை நிவர்த்தி செய்தார். இத்தகைய அற்புதங்களை வாக்கியில் புரிந்த பாபா, பல சமயங்களில் வாக்கியிலிருந்து சுமார் 2.5 கி.மீ. தூரத்தில் அமைந்த காபூல் கந்தஹார் என்ற மலை உச்சியில் அமர்ந்து தியானம் செய்வதை வழக்கமாக கொண்டிருந்தார்.

ஜெய் பாபா தாஜ்!

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## காபூல் கந்தஹாரில் பாபா நிகழ்த்திய அற்புதங்கள்



வாக்கியிலிருந்து 2.5 கி.மீ தொலைவிலுள்ள சிறிய மலைக் குன்றில் தாஜுதீன் பாபா பல மணி நேரங்கள் தனிமையில் அமர்ந்திருப்பது வழக்கம். அன்று அவரைக் காண நகரில் இருந்து சில வியாபாரிகள் (சேட்) வந்திருந்தனர். பாபாஜி அவர்களுடைய பணியை குறித்து விசாரித்தார். வியாபாரிகள், நாங்கள் ஆப்கானிஸ்தான் செல்ல விரும்புவதாக கூறினர். அவர்களது உறவினர்கள் அங்கு வசிப்பதாகவும் கூறினர். அவர்கள் வெகு தொலைவு செல்ல வேண்டியிருப்பதால் தங்களைஆசீர்வதிக்க வேண்டினர். அடுத்த வினாடி என்ன அற்புதம்! அவர்கள் அனைவரும் பாபாவுடன் ஆப்கானிஸ்தானில் காபுல் கந்தஹார் என்ற நகரில் இருந்தனர்.

ஒரே வினாடியில், அனைவரையும் அவ்விடத்தில் சேர்த்து விட்டார். அது மட்டுமல்ல, அவர்களின் வியாபாரமும் முடிந்து உறவினர்களையும் சந்தித்த பின் திரும்பவும் சீச்சோலி மலைக்குன்றில் கொண்டு வந்து சேர்த்து விட்டார். மகான்கள் காலச்சக்கரத்தின் சுழற்சியையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையவர்கள் என்பதை நம்மால் உணர முடிகிறது. அதன் காரணமாகவே அவ்விடம் காபுல் கந்தஹார் என்று அழைக்கப் படுகிறது.

ஜெய் பாபாதாஜ்!

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல